● For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

● ஜூலை 2023 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் ●விலை : ரூ 60 ●இதழ் 38



# ஆசிரியர் சுவடு

கிறிஸ்துவுக்குள் பிரியமான கிறிஸ்தவ வரலாற்று பிரியர்களுக்கு,

கடந்த சில மாதங்களாக சரியான நேரத்திலே வரலாற்று சுவடுகள் உங்கள் கரங்களில் வந்து சேரமுடியாத சூழ்நிலை உண்டு. எனினும் ஒவ்வொரு மாதமும் அச்சிட கர்த்தர் உதவி செய்தார். கடந்த ஆண்டுகளில் ஒவ்வொரு தலைப்பின் கீழ் செயல்பட்டு வந்தது. இரண்டு மாதமாக அநேகர் கேட்டுக் கொண்டதன் மற்றும் விருப்பத்தின் பேரில் தலைப்புகள் இல்லாமல் செயல்பட்டு வருகின்றோம். அநேகர் புதிதாக எழுதி வருகின்றிர்கள் அவர்களுக்கு சங்கத்தின் சார்பிலே நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். வாசகர்கள் உங்களுக்கு அருகில் உள்ள திருச்சபை வரலாறுகள், மிஷனெரி வரலாறுகளை கள ஆய்வு செய்து தொடர்ந்து எழுத அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இதுவரையிலும் நம்முடைய மாத இதழில் வெளி வராத கட்டுரைகளை எழுதவும், மக்கள் இன்றும் கேள்விப்படாத நிலையில் உள்ள வரலாற்று சம்பவங்களை கொண்டு செல்லும் நோக்கில் ஜெபத்துடனும், தரிசனத்துடனும் எழுத அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மிஷனெரிகள் ஏற்றிய அந்த தியாக தீபத்தை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கட்டாய பணியாகும். எனவே வாசகர்கள் மற்றவர்களுக்கு இந்நூலை அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திருச்சபை வரலாற்று நூல்களையும், மிஷனெரி நூல்களையும் அனைத்து திருச்சபைகளுக்கும் கொண்டு செல்ல வாகனம் தேவைக்காகவும், விரைவில் நூலகம் அமைக்கும் பணிகளை தொடங்க இருக்கிறோம். இரண்டு தேவைகளும் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள்.

பராபரனின் பணியில்
*Manna Selvakumar*

**சுஜித் ரெக்ஸ் மன்னா செல்வகுமார்**

வடிவமைப்பு ஆசிரியர்

G Pay

**தொடர்புகொள்ள** **+91 91767 80001**

கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

### மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

**Name: Tinnevelly Christian Historical Society**
**A/c Number : 1748 020000 3684**
**Bank name : Federal Bank**
**IFSC code: FDRL0001748**

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்


### ஆசிரியர்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com




# திருநெல்வேலி மாம்பழச் சங்க பண்டிகையும் அதன் பின்னணியும்

திருநெல்வேலி திருமண்டில விழாக்களில் **மாம்பழச் சங்கம் ஒரு விநோதமான பண்டிகை** அதன் வரலாறு மிகச் சுவையானது.

நெல்லை அப்போஸ்தலன் ரேனியஸ் நாட்களில் மக்கள் கூட்டங் கூட்டமாகக் கிறிஸ்தவ மதம் தழுவினர். 1825 ம் ஆண்டு அதனை தொடர்ந்த ஆண்டுகளை அறுவடையின் காலம் எனலாம். புதிதாகக் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களின் நடை, உடை, கலை, கலாச்சாரம் அனைத்தும் மாறி புதிய நாகரீகம் அவர்களை அரவணைத்தது. பிரித்தெடுக்கப்பட்ட தனி சாதியாகப் பீறிட்டெழுந்தனர். கொத்தடிமைத்தனத்திலிருந்து விடுபடக் கொதித்தெழுந்தனர்.

நெல்லை நாட்டில் கோயில் கொடை விழாகள் ஆனி மாதம் மிகச் சிறப்பாக நடைபெறும். பத்து நாட்கள் ஒரே ஆட்டபாட்டம் தான். வெளியூர்களிலிருந்து மக்கள் வருவார்கள். கடா, அரிசி, மஞ்ச மசால் மற்றும் அனைத்துப் பொருள்களும் கொண்டு வருவர். தாமிரபரணி ஆற்றில் குளித்து ஆட்டுக்கறி புசித்து ஆடிப்பாடி மகிழ்வது ஓர் ஆனந்த அனுபவம். வீட்டுக்கொரு ஆட்டுக்கடா வெட்டி மூன்று நாட்கள் டோரா அடித்து சாமி கும்பிடுவர். ஆற்று மணலில் ஆடிப்பாடி உண்டு உறங்கிப் பரவசம் கொள்வர்.

**புதிதாகக் கிறிஸ்தவர்களான மக்கள் அந்த ஆனி மாதம் என்ன செய்வார்கள். ஒரு கிராமத்தில் பாதிப்பேர் கிறிஸ்தவகளென்றால் மீதிப் பேர் கோயிலுக்குப் போவார்கள். அதைப் பார்த்த புதுக் கிறிஸ்தவர்கள் பின் வாங்கிப் போய்விடக் கூடாதே - அல்லது இளக்கரித்து விடக் கூடாதே. அதற்கு ஒரு மாற்று வழி கண்டு பிடிக்க வேண்டுமே! என்று அன்றைய கிறிஸ்தவர்கள் எண்ணினது இயல்பு.**

1832 ஆம் ஆண்டு டோனாவூர் சேகரத்தில் ஏற்பட்ட காலரா நோயினால் மக்கள் பலர் உயிரிழந்தனர். அப்போது டோனாவூரின் தலைமை உபதேசியாராக இருந்த இரத்தினம் உபதேசியார் அவர்கள் உபதேசிமார் உபாத்திமார்களுக்கு உதவ வேண்டும் என்று ரேனியஸ் உதவியுடன் அனாதைகளுக்காகவும், விதவை பெண்கள் உதவ **“டோனாவூர் சேகர சகாய நிதி”** ஆரம்பிக்கப்பட்டது. இந்நிதி உதவியால் கிறிஸ்தவ சபைகளில் இருந்த ஏழை கைம்பெண்கள் பயன்பெற்றனர். இதன் பின்பு ஊழியரின் மனைவிகள் விதவைகளாக நேரிடின் அவர்களது பராமரிப்புக்காக ரேனியஸ் பல திட்டங்களை தீட்டினார். 1834 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற மாதாந்திரக் கூட்டத்தில் **“திருநெல்வேலி சி.எம்.எஸ் உபதேசிமார் உபாத்திமார் கைம்பெண் நிதியை”** அல்லது **“விதவைகள் நலச்சங்கம்”** ஆரம்பித்தார். அதற்கு ஊழியரே உதவ வேண்டுமென ரேனியஸ் கேட்டுக்கொண்டார்.

அந்த விழாவை கைம்பெண்கள் நலச்சங்க விழா நாளை கோயில் கொடை நாளுக்கு மாற்றினார். அந்நாள் 1834 ஜூலை 8 புதன்கிழமை. அந்நாளில் ஆரம்பத்தில் ஊழியர்கள், சபை மூப்பர்கள் முதலியோர் குடும்பமாக வில்வண்டி கட்டி பாளையங்கோட்டை வந்தனர்.




இன்றைய திரித்துவ அத்தியட்சாலய வளாகத்தில் கூடி ஆராதித்தனர். அது மாம்பழ சீசனானபடியால் மாம்பழங்கள் வண்டி வண்டியாக அங்கு வந்து குவியும். ஆலயத்தில் ஆராதித்து ஆற்றில் குளித்து மகிழ்வர். அதே நாளில் இன்றும் நடந்து வருகிறது.

1835 க்குப் பிறகு ஜார்ஜ் பெற்றிட் ஐயர் தாம் அதனை பொதுமக்களின் பண்டிகையாக மாற்றினார். பிறமத கோயிலுக்குச் சென்றது போலவே உற்சாகமாகப் பாளையங்கோட்டைக்கு வந்தனர், வில் வண்டியில் ஒட்டன் மாடு பூட்டி ஜல் ஜல் என்று வரும் அழகே தனி. ஆண்டுதோறும் கூட்டம் அதிகமானது. கூடார வண்டிகளில் குடும்பத்தோடு வந்தனர். மாம்பழம் நிறைந்து வழிகிற காலமாதலால் அதற்கு **'மாம்பழச் சங்கம்'** என்ற பேர் பிரபலமாயிற்று.

பொதுவாகப் பாளையங்கோட்டை கிறிஸ்தவ மக்கள் மாம்பழச் சங்க விழாவில் பங்கு பெறுவதில்லை. பிறமத மக்களே அதிகமாக நான்கு திசைகளிலிருந்து பாளை மாநகர் நோக்கி வந்தமையால் தங்கள் பெண் பிள்ளைகளுக்கு மாப்பிள்ளை பார்த்து **'ஒழுங்கு'** செய்யவும் தோதுவாயிருந்தது. அது மிக வெற்றிகரமாகவும் - ஆண்டுக்காண்டு விருத்தியாகவும் இருந்தது.

மாப்பிள்ளை பெண்ணையும், பெண் மாப்பிள்ளையையும் இயற்கையாகப் பார்த்துக் கொள்ள வாய்ப்பாகவும் இருந்தது. எனவே இதனை பலர் **மாப்பிள்ளைச் சங்கம்** என்றும் அன்புடன் அழைக்கலாயினர்.

1899 முதல் **மாம்பழச் சங்கம்** என்றும் பின்னர் **கைம்பெண்கள் சங்கம்** என்றும் வழங்கப்பட்டு வந்தது.

பேராயர் அ. ஞா. ஜெபராஜ் (1953) பேராயர். டி. எஸ். கேரட் ( 1971 ) ஆகியோர் காலங்களில் இரு நாட்களின் விழாவானது. முந்தின நாள் மாலை கதாகாலட்சேபமும், மறுநாள் காலை பரிசுத்த நற்கருணை ஆராதனையும், நண்பகலில் காணிக்கை வழிபாடும், சிறப்பு அருளுரையும் நடைபெற்று வந்தன.

திருமண்டில இருநூறாவது ஆண்டு விழாவினை கொண்டாடிய பேராயர் தானியேல் ஆபிரகாம் அவர்கள் காலத்திலிருந்து மூன்று நாள் விழாவானது. மூன்றாம் நாள் நெல்லைத் திருமண்டில ஆண்டு விழாவாகக் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை விடப்பட்டு அனைத்து ஆசிரியர்களும், மூப்பர்களும் பங்கேற்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பேராயர் ஜேசன் எஸ் . தர்மராஜ் அவர்கள் காலத்தில் நூற்றாண்டு மண்டபம் உள்ளும், புறமும் புதுப்பிக்கப்பட்டு 217 ஆவது மாம்பழச் சங்கமும் ஆண்டு விழாவும் சி . எஸ் . ஐ . , பொன்விழா ஆண்டில் புதிய நோக்குடன் - புத்தம்புது தெம்புடன் நடந்தது . (1997)

**பாளை மாம்பழச் சங்கத்தின் தனிச் சிறப்பு யாதெனில் ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்களும், தொழுநோயாளர்களும் நூற்றாண்டு மண்டபத்தின் முன்புள்ள இரு மருங்கிலும் மூன்று நாட்களுக்கு முன்பே இடம்பிடித்து துண்டை விரித்து எல்லை கட்டி அமர்ந்திருப்பர். மூன்று, நான்கு நாட்களும் ஊண், உறக்கம் எல்லாம் அந்த இடத்திலேதாம், வெளியூர்களிலிருந்து வரும் கிராம மக்கள் ஏராளமாக அரிசி, காசு, காய்கறிகள் கொண்டு வந்து வரிசையாக அள்ளி வழங்குவர்.**

ஆண்டு தோறும் நேர்ச்சை செய்து நல்ல ஆயத்தங்களுடன் வருவர். மொட்டை போடுவது உட்பட எல்லா நேர்த்திக் கடன்களும் தவறாது நடைபெறும். தங்கள் வாலிபப் பெண்பிள்ளைகளுக்கு அனைத்து ஆபரணங்களையும் பூட்டி அழகு பார்ப்பர். தங்கள் விரிப்புத் துண்டுகளில் காசும், பொருளும் நிறைந்து பிச்சைக்காரர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு உலாவருவர்.

உண்மையில் மூன்று நாட்களும் ஏழைகளின் நலச் சங்கமாகவே இருந்து வருகின்றன. கைம் பெண்கள் சங்கம், மாப்பிள்ளைச் சங்கம், மாம்பழச் சங்கம் என்று பல பேர்களைப் பெற்றிருப்பினும் **'மாம்பழச் சங்கம்'** என்ற பேரே நிலைத்து நின்றது.

**ஆசிரியர்**



# கோத்தகிரி கல்லறைத் தோட்டத்தில் உறங்கும் ஏற்காட்டின் தந்தை

தொலைதூர தீவு தேசமான ஸ்காட்லாந்து தேசத்திலிருந்து தென்னிந்தியாவின் தமிழ் தேசத்தில், அன்னியனாக ஆட்சியதிகாரத்தோடு வந்திருந்தாலும், கல்வியறிவற்ற பாமர ஜனங்கள் மீது பரிவு கொண்டு அவர்கள் வாழ்வில் கல்வி ஒளியும், இயேசுவின் வழியையும், வாய்மையையும், ஏற்றி வைத்தவர் செம்மல் திரு.மாண்டேகு டுண்டாஸ் கோபர்ன் (Mr.Montague Dundas Cockburn, M.C.S.,-1789-1869) என்பதே அவருக்கான புகழ்ச்சி. எங்கோ பிறந்து இங்கு வந்து மடிந்தாலும், மனிதர் மனதில் இடம் பிடித்து வாழும் இந்த புண்ணிய புருஷன் தனது கல்லறையில் உறங்கினாலும், சேலம் வரலாற்றின் ஏடுகளிலும், சேலம் வரலாற்று ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், அறிஞர்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்து இன்றும் வாழ்கிறார்.

### கோத்தகிரி கல்லறைத் தோட்டத்தில்...

புல்பூண்டுகள் பூத்திருக்கும் மறக்கப்பட்ட பூமியில், பாசி படர்ந்த ஒரு நீலநிற கிரானைட் கல்லறை - அதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

Sacred to the memory of Montague Dundas Cockburn Late of the Madras Civil Service Who departed this life On the 28th.September 1869 aged 81

இதற்குக் கீழே **'நான் பாவிதான் ஆனாலும் நீர் மாசற்ற ரத்தம் சிந்தினீர்; வா என்று என்னை அழைத்தீர் ; என் மீட்பரே வந்தேன்!'** என்ற பாமாலை -292- பாடலின் முதல் சரணம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தின் உல்லாச புரியான **சுகவாசஸ்தலமான ஏற்காட்டின் தந்தை** என இவர் அழைக்கப்படுகிறார். ஏற்காடு என்ற ஏழைகளின் ஊட்டியை உலகிற்கு காட்டி, அங்கு ஆய்வுகளை மேற்கொண்டு, இது ஒரு சுக வாசஸ்தலம் என்றும், பழத்தோட்டங்களும், பெருந்தோட்டங்களும் (Estates) ஏற்படுத்திக் கொண்டு, குடில்களும் (Cottages), மாளிகைகளும் (Bungalows), கட்டிக் கொண்டு, கோடையின் கொடிய வெப்பம் தாங்க ஓடி ஒளிந்து கொள்ளும், அடைக்கலமான ஆனந்த மலை இது என்று முதலில் சொன்னவர் இவரே. அந்த ஆனந்த மலையில் இவர் முதன்முதலில் அமைத்த பெருந்தோட்டமே கிரேஞ்சி எஸ்டேட் ஆகும்; அதற்குப் போகும் சாலை இன்றும் இவர் பெயரில் 'கோபர்ன் சாலை' 'Cockburn Road' என்று அழைக்கப்பட்டுவருகிறது. இந்த பெருந்தோட்டத்தின் மத்தியில் இவர் அமைத்த முதல் மாளிகை 'First Bungalow' கிரேஞ்சி மாளிகை The Grange ஏற்காட்டின் முதல் மாளிகையே அதுதான்.

### ஏற்காட்டின் தந்தை :

**சேர்வராயன் மலைத் தொடர்களின் சிகரமான ஏற்காட்டை ஒரு சுகவாசஸ்தல குடியேற்றமாக முதன்முதலில் உருவாக்கியவர் இவர்.** மேலைநாட்டு பழவகைகளான ஆப்பிள், பேரி, ஆப்ரிக்காட், பிளம், லக்கோட், ஆரஞ்சு, கமலா, மற்றும் பல்வேறு பழவகைகளை ஏற்காட்டில் அறிமுகப்படுத்தியவரும் இவரே. **காப்பிச்செடியை ஏற்காட்டில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியவரும்** இவர்தான். உயர்தரமான காப்பிச் செடிகளை அரேபியா, மற்றும் ஆப்பிரிக்காவின் லைபீரியா போன்ற பகுதிகளிலிருந்து கொண்டுவந்து அவைகளை ஏற்காட்டில் விளைவித்து, **பல ஏக்கர் நிலங்களில் காப்பித் தோட்டங்களை உருவாக்கிக் காண்பித்தவர்.** இந்த அவரது **முதல் பெருந்தோட்டம் கிரேஞ்சி காப்பித் தோட்டம்** - அது இன்றும் தொடர்கிறது. இந்த பெருந் தோட்ட நடுவில் 1820 ல் அவர் கட்டிய மாளிகைதான் அந்த **கிரேஞ்சி மாளிகை** அது இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

### ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக...

1820 ஆம் ஆண்டு முதல் 1829 ஆம் ஆண்டுவரை ஏறத்தாழ 10 ஆண்டுகள் சேலம் மாவட்டத்தின் ஆட்சித்தலைவராக இருந்தவர், இவரது ஆட்சிக்காலத்தில் சேலம் மாவட்டம் ஆந்திரமாநிலத்தின் சித்தூர் வரையிலும், வேலூர் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் ஒரு எல்லையாகவும் இருந்தது. அன்றைய சேலம் மாவட்டம் இன்றைய கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு மிகப்பெரிய நிலப்பரப்பாக, **இந்தியாவின் முதல் மாவட்டமாக,** மிகப்பெரிய மாவட்டமாக இருந்தது. சேலத்தில் ஜமீன்தாரி நிலநிர்வாக முறை தோல்வியடைந்த போது, அதற்கு மாற்றாக புகழ்பெற்ற தாமஸ் மன்றோ கொண்டுவந்த ரயத்துவாரி நிலநிர்வாக முறையை அமல்படுத்தி அதில் வெற்றியும் கண்டார். வருவாய்த் துறையில் இவர் கொண்டுவந்த சீர்திருத்தங்கள், விவசாயிகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு அவர் மேற்கொண்ட நலத்திட்டங்கள் நல்ல பலனைக் கொடுத்தது.

**சேலம் லண்டன் மிஷன் பணித்தள உருவாக்கத்தில்...**

ஆங்கிலேயர்கள் கிறிஸ்தவ மிஷனெரிகளை தங்கள் ஆட்சிப்பகுதிகளில் நற்செய்தி பணியாற்ற அனுமதிக்க, அழைக்க, தயங்கிய அந்த நாட்களில், துணிந்து சேலம் மாவட்டத்தில் கிறிஸ்தவ நற்செய்திப் பணித்தளத்தை ஏற்படுத்தக்கோரி லண்டன் மிஷன் நிர்வாகிகளை வற்புறுத்தி அழைத்தவர் இவரே. இவரது அழைப்பை ஏற்று சேலத்தில் லண்டன் மிஷன் பணித்தளத்தை 1827 ஆம் ஆண்டு அதன் நிர்வாகிகளான திரு.டயர்மேன், மற்றும் திரு.பென்னட் ஆகியோர் தோற்றுவித்தனர். சேலம் லண்டன் மிஷன் பணித்தளம் இவ்வாறு தோற்றுவிக்கப்பட்டபோது அதன் **முதல் நற்செய்திப் பணியாளராக சங்கை ஹென்றி கிறிஸ்பு** ஐயரும், அவரது துணைவியாரும் பெங்களூரிலிருந்து பல்லக்கில் கடினமான, ஆபத்தான பயணத்தை துணிந்துமேற்கொண்டு சேலம் வந்தபோது, அவர்களை சேலம் நகர எல்லையில் திரு.M.D.கோபர்ன் தனது அதிகாரிகள் புடைசூழ வரவேற்று, அவர்கள் இருவரையும் தனது மாளிகையிலே ஒரு மாத காலம் தங்க வைத்து உதவினார். அதுமட்டுமல்லாது, சேலம் மிஷன் வளர்ச்சிக்காக நிலங்களையும், கல்விநிலையங்களையும் தந்து உதவினார். அரசின் திட்டப்படி தான் துவக்கிய 5 பள்ளிக்கூடங்களை சங்கை ஹென்றி கிறிஸ்பு ஐயரிடம் வழங்கி அவைகளை சிறப்பாக நடத்தும்படி கேட்டுக்கொண்டார்.

**கோத்தகிரியில் M.D.கோபர்ன் தம்பதியரின் ஊழியம்:**



இவரது மக்கள் நேச திட்டங்களாலும், கிறிஸ்தவ சார்பு செயல்பாடுகளாலும், அதிருப்தி அடைந்த ஆங்கில அரசு நிர்வாகம் இவரை பதவிநீக்கம் செய்தது. அதனால் கவலைப்படாத திரு.M.D.கோபர்ன் தனது மனைவி திருமதி.கேத்தரீனுடன் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கோத்தகிரிக்குச் சென்று குடியேறி அங்கு தனது கிறிஸ்தவ சமயப்பணியை கணவனும் மனைவியுமாக இணைந்து செய்து வந்தனர். திரு.M.D.கோபர்ன் கோத்தகிரியிலே 1859 ஆம் ஆண்டு படுகர் (Badagas) இன மலையக மக்களுக்காக ஒரு பள்ளிக்கூடத்தை உருவாக்கினார். அதுவே இன்றைய கோத்தகிரி CSI மேனிலைப்பள்ளியாக நிலைத்திருக்கிறது. அதேபோல, 1869 ஆம் ஆண்டு படுகர் இனமக்களுக்காக ஒரு தேவாலயத்தைக் கட்டிமுடித்தார். அதுவே இன்றைய கோத்தகிரி CSI வெஸ்லி தேவாலயம். பின்பு இந்த இரண்டு நிறுவனங்களையும் பேசல் மிஷன் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் ஒப்படைத்தார். பேசல் மிஷன் (Basel Mission) நற்செய்தி அமைப்பு கோத்தகிரியிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் நன்கு வளர்ந்து விரிவடைய அந்த அமைப்பிற்கு இவர்கள் இருவரும் மிகப்பெரிய ஆதரவாக இருந்தனர்.

**கேத்தரீன் அருவி :**

கோத்தகிரியில் கூட காப்பித் தோட்டங்களை முன்னோடியாக இவர் உருவாக்கித்தந்தார். இவரது மகள் M.B.L.கோபர்ன் கோத்தகிரியிலே தனது ஆல்போர்ட்ஸ் பெரும் தோட்டத்தில் (Allports Estate) முதன்முதலாக தேயிலைச் செடிகளை அறிமுகப்படுத்தினவர் ஆவார். இவரது மனைவி திருமதி கேத்தரீன் அம்மையாரின் பெயரில் கோத்தகிரி அரவேணு பகுதியில் ஒரு இரட்டை அருவி ஒரு அற்புதமான சுற்றுலா ஸ்தலம் உள்ளது. அது Catherine Falls கேத்தரீன் அருவி என்று இன்றும் அவர் பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது. கோத்தகிரியில் மேட்டுப்பாளையம் சாலையில் அரவேணு என்னும் இடத்தில் உள்ள இந்த கேத்தரீன் அருவி ஒரு ரம்மியமான சுற்றுலா இடம்.

**அஸ்தமன காலம்:**

இப்படியாக சேலம் மாவட்ட வரலாற்றிலும், நீலகிரி மற்றும் கோத்தகிரி பகுதி வரலாற்றிலும் நிலைத்த புகழ்பெற்ற திரு.மாண்டேகு டுண்டாஸ் கோபர்ன் தனது 81 ஆம் வயதில் கோத்தகிரியில் 1869 ஆம் ஆண்டு இயேசுவில் துயில் கொண்டார். இவரைத் தொடர்ந்து இவரது மனைவி திருமதி.கேத்தரீன் ஜேன் கோபர்ன் தனது சேவைப் பணிகளின் மத்தியில் தனது 80 ஆவது வயதில் இயேசுவில் துயில் கொண்டார். இவர்கள் இருவரின் கல்லறைகளும் கோத்தகிரி கல்லறைத் தோட்டத்தில் வரலாற்றின் சாட்சியாக இன்றும் நிலைத்திருக்கிறது. உண்மையாகவும், அமைதியாகவும் வாழ்ந்து இங்கே மடிந்த இந்த தம்பதியர் வாழ்வு இன்றும் நமக்கெல்லாம் ஒரு சவாலாக, முன்மாதிரியாக, தங்கள் பணிகளில் வரலாறு படைத்தவர்களாக ஜொலிக்கக் காண்கிறோம்.

**சேலம் வரலாற்றுச் சங்கத்திற்காக**


**திரு.J பர்னபாஸ்**

அருள்திரு.

# ரூஃபஸ் ஆண்டர்சன்

## (ஆகஸ்ட் 17, 1796 – மே 23, 1880)

டாக்டர். எஸ். ஸ்டீபன் ராஜ்குமார் இன்பநாதன், மதுரை



இவர் குருவானவரின் மகன். சிறுவனாக இருக்கும்போது வெளிநாட்டிலே அருட்பணியாளராக செல்ல வேண்டும் என்கின்ற ஆர்வம் அவருக்குள் இருந்தது. தன்னுடைய கல்லூரி படிப்பை முடித்து (Bowdoin College- 1818), இறையியல் பயிற்சி பெற்று விட்டு (And over Seminary- 1822), அமெரிக்கன் போர்டு ஆப் கமிஷனர் (American Board of Commissioners for Foreign Missions - ABCFM ) என்ற வாரியத்திடம் இந்தியாவிற்கு அருட்பணியாளராக செல்ல வேண்டும் என்கின்ற விண்ணப்பத்தை Rev. ஆண்டர்சன் அளித்தார். அன்டோவர் செமினரியில் படிக்கும் போது ABCFM அலுவலகத்தில் பகுதி நேரமாக வேலை செய்தார். இது 1810 இல் நிறுவப்பட்ட முதல் அமெரிக்க வெளிநாட்டு மிஷனரி சங்கமாகும். ஆனால் ABCFM தலைமை இடத்திலோ, உலகத்தின் மற்ற பகுதியில் பணியாற்றிக் கொண்டிருந்த அருட்பணியாளர்களுடைய ஊழிய அறிக்கை மற்றும் கடிதங்களைப் படித்து அதற்கு முடிவுகளை எடுக்கக்கூடிய ஒரு செயலர் பணி காலியாக இருந்தது. எனவே, இவரை உடனடியாக அந்த பணிக்கு அமர்த்தினார்கள். லத்தீன் அமெரிக்க, மத்திய தரைக்கடல் மற்றும் அருகிலுள்ள கிழக்கு பகுதி, சிலோன், சிரியா, துருக்கி மற்றும் ஹவாய் ஆகிய இடங்களில் பணியாற்றிக் கொண்டிருந்த மிஷனரிகள் எழுதுகின்ற கடிதங்களை மெழுகுவர்த்தி வெளிச்சத்திலே படித்து அவர்களுக்கு வேண்டிய காரியங்களை செய்து உற்சாகமூட்டும் வண்ணமாக பதில் கடிதங்களை எழுதுகின்ற மிகப்பெரிய பொறுப்பு இவருக்கு இருந்தது. இந்த பணியை அவர் சரியாக செய்த காரணத்தினால் விரைவில் மூத்த செயலாளராகவும், வாரியத்தின் முதன்மைக் கொள்கை வகுப்பாளராகவும், (ABCFM) நிர்வாகியாகவும் ஆனார். அவர் லத்தீன் அமெரிக்கா (1819,1823-1824), மத்திய தரைக்கடல் மற்றும் அருகிலுள்ள கிழக்கு (1828-1829, 1843-1844), இந்தியா, சிலோன், சிரியா, துருக்கி (1854-1855) மற்றும் ஹவாய் (1863) ஆகிய நாடுகளில் பயணம் செய்தார். Rev. ரூஃபஸ் ஆண்டர்சன் 1866 இல் தான் வகித்து வந்த செயலாளர் பதவியை ராஜினாமா செய்தார். ஆனால் 1875 வரை ப்ருடென்ஷியல் கமிட்டியில் தொடர்ந்தார். அவர் அமெரிக்க ஓரியண்டல் சொசைட்டியின் உறுப்பினராகவும் ஆக்கப்பட்டார். மிஷனரிகளின் அர்ப்பணிப்பு சேவையின் போது அவரது பிரசங்கத்தில் மிஷனரிகளுக்கு இரண்டு விஷயங்களைச் சுட்டிக்காட்டினார்.


(i) **கடவுளுடன் ஒப்புரவாவதற்கு மனிதர்களைத் தூண்டுதல்;** (ii) **பல்வேறு வழிகளில், மதம் மாறியவர்களின் சமூக கட்டமைப்பை மறுசீரமைத்தல். அவரைப் பொறுத்தவரை, இந்த இரண்டுமே மிஷனரிகளின் எளிய மற்றும் உன்னதமான ஆன்மீக இலக்காக இருக்க வேண்டும்.**

அவரது எழுத்துக்களில் குறிப்பிடத்தக்க மதம் மாறியவர்களின் சுயசரிதைகள் மற்றும் பிற விளம்பரத் துண்டுபிரசுரங்கள், இறை பணி கோட்பாடு, மூலோபாயம் பற்றிய ஏராளமான கட்டுரைகள், ஆவணங்கள் மற்றும் நான்கு முக்கிய வரலாற்றுப் படைப்புகள் ஆகியவை அடங்கும். அவர் பல கல்வி, கலாச்சார மற்றும் பரோபகார நிறுவனங்களை நிறுவுதல் நிர்வகிப்பதில் அவருக்கு அலாதி ஈடுபாடு. வேதப்பூர்வ சுய-பிரசாரம் செய்யும் கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்காக மிஷன்கள் நிறுவப்பட்டதாக அவர் கூறுகிறார். ஆண்டர்சனின் முக்கிய கருத்து என்னவென்றால், வேதம் சார்ந்த, சுய பிரச்சாரம் செய்யும் கிறிஸ்தவம். தற்போதைய மிஷனரி இயக்கங்களில் கூட இந்த கருத்து மிகவும் முக்கியமானது. அவரது கருத்து பின்வரும் மூன்று காரணிகளை உள்ளடக்கியது:

**(1) சுய-ஆதரவு, (2) சுய-ஆளுமை மற்றும் (3) சுய-பிரசாரம் செய்யும் தேவாலயங்களை நிறுவுவதைத் தவிர மிஷன் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ செயல்படக்கூடாது என்று ஆண்டர்சன் முக்கியமாக வாதிட்டார்.**

1854 மற்றும் 1855 ஆம் ஆண்டுகளில் ஆண்டர்சன் இந்தியா, சிலோன் மற்றும் அருகிலுள்ள கிழக்கு நாடுகளில் உள்ள தூதுக் குழுக்களுக்கு தலைமை தாங்கினார். பள்ளிகள், அச்சகங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் முதலீடு குறைவாக இருக்க வேண்டும். மிஷனரிகள் மத்திய நிலையங்களிலிருந்து கிராமப்புறங்களுக்குச் செல்ல வேண்டும். உள்ளூர் போதகர்கள் விரைவாக நியமனம் செய்யப்பட வேண்டும், மேலும் சபைகள் தங்கள் சொந்த திருச்சபை அமைப்பை உருவாக்க வேண்டும். 1856 ஆம் ஆண்டுக்கான ஏபிசிஎஃப்எம் ஆண்டு அறிக்கையில் உள்ள **'மிஷனரி கொள்கையின் அவுட்லைன்'**, பக். 53-58, இந்தக் கொள்கைகளில் பலவற்றைச் சுருக்கமாகக் கூறுகிறது. Rev. ஆண்டர்சனின் முயற்சிகள் சில மிஷனரிகளை ஊழியத்திலிருந்து அந்நியப்படுத்தியது மற்றும் பெரிய விவாதத்தைத் தூண்டியது. அவரும் அவரது மனைவியும் உலகத்தின் பல பாகங்களில் இறை பணி செய்து விடுமுறைக்காக அமெரிக்கா வரும் இறை பணியாளர்களுக்கு விருந்தோம்பல் மற்றும் அவர்களின் மீது அக்கறை செலுத்துவதில் பிரசித்தி பெற்றவர்கள். அவர் மே 23, 1880, பாஸ்டன், மாசசூசெட்ஸில் இல் இறந்தார்.

புதுமையான கொள்கைகளை நேர்த்தியாக வரையறுத்தும் ஊழியத்தின் முக்கியமான மூன்று தூண்களை வலியுறுத்தியதும் இன்று வரை உலக திருச்சபை வரலாற்றில் வரையறுத்ததும் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியவை ஆகும்.




**உயர்ந்தவற்றை தேடிப் படிக்க வேண்டும். உன்னதமானவற்றை ரசிக்க வேண்டும்.**

**Rev. I . Livingston Rajan Durai., NGO B Colony**

பிரியமானவர்களே விசுவாசிகள் யாவரையும், இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்

இன்று சத்திய பிரியர்கள், ஆண்டவருடைய மனிதர்கள், அற்புத மனிதர்கள் அவ நம்பிக்கையுடன் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் ஆண்டவரற்றவர்கள், அற்ப மனிதர்கள் அம்பலமேறி அறை கூவுகிறார்கள், இதுபோலவே இன்றைய இந்திய சபைகளிலும், சமூகத்திலும், அரசியலிலும், மற்றும் சகவாழ்விலும் அநேக வல்லுநர்கள், நல்லவர்கள், சிறப்பானவர்கள் அவநம்பிக்கையுடன் அமர்ந்திருக்க வேண்டிய சூழல் நிலவுகிறது. ஆகவே பைபிள் வசனப்படி நீதிமான்கள் மறைந்து கொள்கின்றனர். அவர்கள் அமைதியாகிவிட்டனர்.

தொடக்கத்தில் உண்மையை வெற்றி பெறச் செய்ய போராடுகிறவன் கூட நாளடைவில் பொய் ஜெயிப்பதால் ஏற்படும் நன்மைகளை கண்டு அதையே களத்தில (அரசியல், சமூக, சபை, etc) இறக்க கற்றுக் கொள்கிறான். அநேக நல்ல தலைவர்கள் கடைசியில் இப்படி இறங்கி வந்து இப்படிப்பட்ட பொய்யர்களுடன் அல்லயன்ஸும் வைத்துக் கொள்கின்றனர்.

என்றேனும் இந்நிலைமை சீராகும் என்ற ஒரு துளி நம்பிக்கையின் ஓரத்தில் ஒட்டிக்கொண்டு நாம் வாழ்ந்து வருகிறோம். முகம் தெரியாத யாருக்காகவோ நாம் காத்திருக்கிறோம். முகவரி அறியாத பயணத்தின் நடுவில் நாம் தவித்து நிற்கிறோம். இன்று போய் நாளை நன்றாக அமையும் என்ற ஒற்றை விசுவாசத்தில் நம் வாழ்வு நகர்ந்து கொண்டிருக்கிறது.

இன்று தேசத்தில் கடந்து 75 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு **லீலி புஷ்பம்** போன்ற நற்சிந்தனை உள்ளோர் அமர்ந்திருக்க, கள்ளிகள் போன்ற நச்சு தன்மையுடையவர்கள் கதகளி ஆடிக் கொண்டிருக்கின்றனர். ஆம் குயில்கள் மவுனம் சாதிக்கின்றன, கோட்டான்கள் கூப்பாடு போடுகின்றன. இயேசுவின் வழி தோன்றல்கள் நாங்களே; நானே; மிஷினரிகள் வழி நடக்கும் தம்பி நான் என்பவர்கள், சத்திய பற்றாளர்கள் நாங்களே, சமூக நீதி காத்தவர்கள், காப்பவர்கள் எல்லாம் மவுனம் சாதித்ததால் நீதிமான்கள் மவுனிக்கப்பட்டனர். சங்கிகளாககூட சித்தரிக்கப்படுகின்றனர், சிறையில் தள்ளப் படுகின்றனர். அதே வேளையில் கோட்டான்கள் கூப்பாடு போட்டு கொக்கரித்துக் கொண்டிருக்கின்றன. **நல்லவை தயங்கும்போது அல்லவை ஆர்ப்பாட்டம் போட்டு அட்டகாசம் செய்கின்றன.**

இன்றிருக்கும் பிரச்சனை எது? அற்புதம் எது ? அற்பம் எது? என்று அறிய முடியாத அவலமே நமது பிரச்சனை ஆகும். சர்க்கரை சப்தமில்லாமல் இருப்பதால் சந்தடி சாக்கில் இலுப்பை பூ கொக்கரித்து மகிழுகின்றன. இன்றைய தலைமையை இதற்கு ஒப்பிட்டு பார்க்கலாம். பயங்கரவாதிகளை ஒப்பிடலாம்.

தெருவை கூட்டவும் ஒய்யார விளம்பரம் இங்கு நடக்கின்றது. அதையும் கைதட்ட விசிலடிச்சான் குஞ்சுகள், மீடியாக்கள், காத்து கிடக்கின்றன. தம்பட்டம் அடிக்காதவனை தம்பிடிக்கும் யாரும் மதிப்பதில்லை. (என்னால், எனது கூட்டத்தால், ஜெபத்தால் நடந்தது என புரியாத விளம்பரம் செய்யாவிட்டால் ஊழியமே பலருக்கு வேஸ்ட் தான்) ஆகவே விளம்பரம் முக்கியமாகிறது. விளம்பரம் இல்லையென்றால் நல்ல காரியம் செய்தால் கூட, நல்ல ஊழியம் செய்தால் கூட உலகில் கண்டு கொள்வார் இல்லை. இதனால் தான் அற்புதம் எது? அற்பம் எது? என சிந்தனை அற்ற கூட்டங்கள் பெருகிவிட்டதால், நாளடைவில் கோட்டான்களின் கூக்குரலையே நேசிக்க கற்றுக் கொண்டதால், மக்கள் கூட்டத்தில் குயில்கள் அபஸ்வரத்தில் பாடுவதாக தோன்றுகிறது.

நடப்பதை பார்த்து, அறியும், அறிவும்-ஆற்றலும் உடையவர்கள், ஒதுங்கி கொள்கிறார்கள் அல்லது ஓரங்கட்டப்படுகிறார்கள். நம்மை நாமே முன்மொழிவது எத்தனை அசிங்கம் என எண்ணுகிறவர்களே அநேகர். அவர்களே வாழ்த்து வரும் என எதிர்ப்பார்க்கும்போது வசை வந்தால் அமைதி காக்க கற்றுக் கொள்கின்றனர். இதனால் அநேகர் முதலையை நம்பி அதன் முதுகில் சவாரி செய்து கொள்ள நம் பார்வையில் ஆயத்தமாகின்றனர். பக்குவம் வேண்டும் -உயர்ந்தவற்றை தேடிப் படிக்க வேண்டும். உன்னதமானவற்றை ரசிக்க வேண்டும். அற்பங்களை விட்டு விட வேண்டும். அற்புத மனிதர்களை கண்டறிந்து தேசத்திற்கு, சபைக்கு பயன்படுத்த வேண்டும்.

**தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.**

## தமிழ்நாட்டின் மேற்கு பகுதியிலும் மத்திய பகுதியிலும் ஏற்பட்ட

# மாபெரும் எழுப்புதல் இயக்கம்

ஜா.ஜான் ஞானராஜ்



1913 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர்- பறையர் மத்தியில் தமிழ்நாட்டின் மேற்கு பகுதியிலும் தமிழ்நாட்டின் மத்திய பகுதியிலும் மாபெரும் மக்கள் திரள் கும்பல் இயக்கம் தொடங்கியது. இந்த பகுதிகளில் ஆதி திராவிடர் சமூகத்தினர் பல உட்பிரிவினராகக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். ஆதி திராவிடர் சமூகத்தின் அனைத்து உட்பிரிவினர் மத்தியிலும் இந்த மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் தோன்றியது. இது சிறப்புக்குரிய அம்சமாக இன்றளவும் பார்க்கப்படுகிறது.

ஆதிதிராவிடர்- பறையர் சமூகத்தினர் மத்தியில் காணப்பட்ட உட்பிரிவுகள் பின்வருமாறு:-

1. கொங்கு பறையர் (அல்லது) சங்கு பறையர்,
2. பச்சை வளையல் பறையர்,
3. சாம்பவப்பறையர்
4. சோழிய/சோளியப் பறையர்,

**கொங்கு பறையர் மத்தியில் மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம்**

தமிழ்நாட்டின் மேற்கு பகுதியான கொங்கு பகுதியில் வாழ்ந்த ஆதிதிராவிடர் பறையர் சமூகத்தினர் மத்தியில் மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1913 இல் தோன்றியது. இவர்கள் மத்தியில் கொங்கு பறையர் என்ற சங்கு பறையர் வாழ்ந்த பெருங்கருணைப்பாளையம் என்ற ஊரே இந்த சமூக மக்கள் மத்தியில் மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் பிறந்த ஊராகும்.

இந்த ஊர் தாராபுரத்தில் இருந்து வடக்கே முப்பது கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. பெருங்கருணைப்பாளையத்தைச் சார்ந்த அழகன், குப்பன் என்ற இரண்டு துணி வணிகர்கள் சந்தைக்கு துணி வணிகத்திற்காகச் சென்றபோது கிறிஸ்தவ மிஷனரிகள் சந்தையில் கொடுத்த நற்செய்தி துண்டுப் பிரதியின் மூலம் கிறிஸ்தவ நற்செய்தியை அறிந்து கொண்டார்கள். அவர்கள் ஈரோடு லண்டன் மிஷனரி சங்க மிஷனரிகள் மூலம் கிறிஸ்தவர்களான தங்களது உறவினர்கள் மூலம் கிறிஸ்தவத்தை குறித்து கூடுதலாகத் தெரிந்து கொண்டார்கள். நீலகிரி தேயிலை தோட்டத்திலும், வயநாடு தேயிலைத் தோட்டத்திலும் வேலை செய்த பெருங்கருணைப்பாளையத்தைச் சார்ந்த நிக்கோதேமையும் கிறிஸ்தவம் குறித்து இவர்களுக்கு மேலும் அதிகமாக கற்பித்தார். அழகன் பெருங்கருணைப்பாளையத்தில் தாழ்த்தப்பட்ட சமூக மக்களின் தலைவராக இருந்தார். அவர் தாழ்த்தப்பட்ட சமூக மக்களின் கூட்டத்தைக் கூட்டி கிறிஸ்தவ சமயத்தைப் பற்றியும் இயேசு கிறிஸ்துவின் அன்பு குறித்தும் விளக்கமாகப் பேசினார். அதன் விளைவாக அந்த கிராமத்தைச் சார்ந்தவர்கள் ஈரோடு சென்று லண்டன் மிஷனரி சங்க ஊழியர்களைச் சந்தித்து தாங்கள் அனைவரும் கிறிஸ்தவராக தீர்மானித்திருப்பது குறித்து தெரிவித்து தங்கள் பகுதிக்கு ஊழியர்களை அனுப்பும்படி அழைப்பு கொடுத்தனர். அதற்கு அவர்கள் பெருங்கருணை பாளையம் தாராபுரம் மெரிடிஸ்ட் மிஷனுக்கு உட்பட்ட பகுதியில் வருகிறது. ஆதலால் நீங்கள் தாராபுரத்தில் இருக்கிற மிஷனரி ஜே. ஜே. எல்லிசிடம் செல்லுங்கள் என வழி காட்டினார். அதன்படி அவர்கள் தாராபுரத்தில் இருந்த மிஷனரி ஜே.ஜே எல்லிசிடம் சென்று தங்கள் பகுதிக்கு கிறிஸ்தவ நற்செய்தியை அறிவிக்க வரும்படி அழைப்பு கொடுத்தனர். மிஷினரி அருள்திரு. ஜே.ஜே. எல்லிஸ் மற்றும் பால் ரங்க இராமானுஜம் ஆகிய இருவரும் பெருங்கருணைப்பாளையத்திற்கு நேரில் சென்று நிலைமைகளை கண்டறிந்து நற்செய்திப் பணி செய்ய, கல்விப் பணி செய்ய, கிறிஸ்தவ உபதேசிமார்கள் மற்றும் ஆசிரியர்களை பெருங்கருணைப்பாளையத்திற்கு அனுப்பினார்கள். பெருங்கருணைப் பாளையத்தில் கொங்கு பறையர் சமூகத்தில் பெரும்பாலானோர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கு திருமுழுக்கு எடுப்பதற்காக நாள் குறிக்கப்பட்டது. அந்த நாளை அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். ஆனால் அந்த வேளையில் நில பிரபுக்களான உயர் ஜாதி இந்துக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பு வந்ததால் அழகன் மட்டும்

திருமுழுக்கு பெறுவதற்கு தனித்து தைரியமாக நின்றார்.

22.02.1913 இல் அழகன் ஆபிரகாம் என்ற பெயரில் திருமுழுக்கு பெற்றார். அடுத்த ஆறு நாட்களுக்குப் பின் குப்பன் இயேசுவடியான் என்ற பெயரில் திருமுழுக்கு பெற்றார். 28.03.1913 அன்று இயேசுவடியானின் மகன் நாச்சிமுத்து வேதநாயகம் என்ற பெயரில் திருமுழுக்கு பெற்றார். அதைத்தொடர்ந்து அந்த கிராமத்தாரில் கொங்கு பறையர் சமூகத்தார் அனைவரும் கிறிஸ்தவத்தை ஏற்றார்கள். ஒரு சில ஆண்டுகளில் அந்த வட்டாரத்தில் இருந்த கொங்கு பறையர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் கிராமம் கிராமமாக ஆயிரக்கணக்கில் கிறிஸ்தவத்தை ஏற்றார்கள்.

### பச்சை வளையல் பறையர் மத்தியில் கிறிஸ்தவம்

பச்சை வளையல் பறையர் மத்தியில் மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் சின்ன தாராபுரத்தில் இருந்து வடமேற்கே எட்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள மதியாக்கூடலூர் என்ற கிராமத்தில் 1921 இல் எழும்பியது. தங்களது பண்பாட்டை கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வண்ணம் பெண்கள் பச்சை நிற வளையல் அணிந்து இருந்ததால் அந்த பறையர் சமூகத்தினர் பச்சை வளையல் பறையர் சமூகத்தினர் என்றழைக்கப்பட்டனர். மதியாக்கூடலூரில் கோயில் பூசாரி ஆக இருந்த பவுன்ராஜ் 1921 இல் திருமுழுக்கு பெற்றார். மதியாக்கூடலூரில் 1922 இல் தேவாலயம் கட்டப்பட்டது. அந்த வட்டாரத்தில் கூட்டம் கூட்டமாக வசித்து வந்த இந்த ஆயிரக்கணக்கான பச்சை வளையல் பறையர் சமூகத்தினர் படிப்படியாக கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டனர்.

### சாம்பவப் பறையர் மத்தியில் கிறிஸ்தவம்

சாம்பவப் பறையர் மத்தியில் மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் 1920 இல் தொடங்கியது. 1920 ஆம் ஆண்டு உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் ப்ளேக் எனும் கொடிய நோய் பரவி ஆயிரக்கணக்கானோர் மரணமடைந்தனர். அந்த நேரத்தில் மிஷனரி அருள்திரு. ஜான் பாஸ்டின் மூலம் குணம் அடைந்த கனியூர் சாமுவேல் என்ற சாம்பவப் பறையர் சமூகத்தின் கண் பார்வை அற்றவரே இந்த மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் உருவாக காரணமாக இருந்தவர் ஆவார். சாமுவேல் பாளையங்கோட்டையில் இருந்த கிறிஸ்தவ கண் பார்வை அற்றோர் பள்ளியில் கண் பார்வை அற்றவர்களுக்கான பிரெய்லி எழுத்துமுறை மூலம் கல்வியைக் கற்றவர் ஆவார். இவர் நல்ல இறை பணியாளர், இசைஞானி, வயலின் இசைப்பதில் வல்லவர் இவரை மெதடிஸ்ட் மிஷன் ஊழியராக உடுமலைப்பேட்டையில் நியமித்தது இவரது நற்செய்தி பணியும் இசைஞானமும் இவரது உறவினர்களைக் கவர்ந்தது இவர் சார்ந்த பச்சை வளையல் பறையர் சமூகம் வாழ்ந்து வந்த கனியூர், காரக்குழும்பு கல்லாபுரம் குமாரலிங்கம் கண்ணாடிப்புத்தூர் மடத்துக்குளம் கடத்தூர் முள்ளங்கிவலசு, தான்தோணி குழிஞ்சிவாடி லஞ்சியம்பாளையம் கிராமங்களில் கூட்டமாக வசித்து வந்த சாம்பவர் பறையர்கள் ஆயிரக்கணக்கில் திருமுழுக்கு பெற்று திருச்சபையில் சேர்ந்தார்கள்.

### சோழியப் / பறையர் மத்தியில் கிறிஸ்தவம்

சோழிய பறையர் மத்தியில் மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் 1921 இல் தொடங்கியது. பெரம்பலூருக்கு அருகில் பச்சைமலை அடிவாரங்களில் சோழிய பறையர்கள் பரவி வாழ்ந்த கிராம பகுதிகள் இருந்தன. சேலம் செந்தூரப்பட்டியைச் சார்ந்த வேதமாணிக்கம் மற்றும் ஆசீர்வாதம் ஆகிய இரண்டு மர வேலை ஆசாரிகள் அரும்பாவூர் பூலாம்பாடிக்கு வருகை தந்தனர். அந்த இடத்தில் சோழிய பறையர் சமூகப் பெண்களை இவ்விருவரும் திருமணம் செய்தனர். இந்த இரண்டு குடும்பங்களிடமும் லண்டன் மிஷனரி சங்கத்தார் நற்செய்தி அறிவித்து வந்தனர். வேதமாணிக்கம் ஆசீர்வாதம் ஆகிய இருவரும் லண்டன் மிஷனரி சங்க குருவானவர் அருள்திரு. ஹாட்சி கொடுத்த கடிதத்துடன் திருச்சியில் இருந்த மெத்தடிஸ்ட் மிஷனரி ஜே.ஜே.எல்லிசை சந்தித்தனர். அந்த கடிதத்தில் பெரம்பலூர் பகுதி திருச்சி மெதடிஸ்ட் மிஷனுக்கு உட்பட்டது. நீங்கள் இந்த பகுதியை கவனித்துக் கொள்ளுங்கள் என எழுதி இருந்தது.

இதே நேரத்தில் திருமாந்துறையில் சின்னத்தம்பி என்ற சோழிய பறையர் இலங்கை சென்று திரும்பி இருந்தார். இவர் குரும்பலூரில் சென்னை மாகாண அமைச்சர் எம்.சி.இராஜா 1921 இல் ஒருதாழ்த்தப்பட்டோர் மாநாடு நடத்தினார் இந்த மாநாட்டில்

I. தாழ்த்தப்பட்டோர் பிறருக்கு அடிமையாக இருக்க கூடாது.
II. பிணக்குழி வெட்டக்கூடாது.
III. பிறருக்காக இழவு/துக்க செய்தி அறிவிக்க செல்லக்கூடாது.
IV. பறை அடிக்க/அறிவிக்க செல்லக் கூடாது.
V. தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப வேண்டும்

இந்த மாநாட்டு தீர்மானங்களை நில உடமையாளர்களான ஆதிக்க சாதி இந்து சமூகத்தினர் கடுமையாக எதிர்த்தனர். சின்னத்தம்பியைக் கொலை செய்ய முயற்சித்தனர். சின்னத்தம்பி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இது குறித்து முறையிட்டார். அவருக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. அவர் மூலம் கிறிஸ்தவ ஊழியர் தொடர்பு கிடைத்தது. வேதமாணிக்கம் ஆசீர்வாதம் சின்னத்தம்பி ஆகியோர் பெரம்பலூரில் மெதடிஸ்ட் பணி தொடங்குவதற்கு மூல காரணமாக இருந்தனர். சின்னத்தம்பியே முதலில் திருமுழுக்கு பெற்றார். 1922 இல் திருமாந்துறை, அரும்பாவூர், பூலாம்பாடி, கிராமங்களில் சோழியப் பறையர் சமூகத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்றனர்.

1923 இல் அருள்திரு. ஜான் டி முத்தையா பெரம்பலூர் வட்டார தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களை கண்காணித்து அவர்கள் மத்தியில் தங்கி நற்செய்தி பணி செய்யும் படியாக அனுப்பி வைக்கப்பட்டார். பெரம்பலூரில் தேவாலயம் குருமனை வேளாண் பண்ணை ஆகியவை அமைக்கவும் மூன்று ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு அந்த இடத்தில் குருமனையும் தேவாலயம் கட்டப்பட்டது. கூடுதல் நற்செய்திப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பெரம்பலூரை சுற்றி 20 முதல் 80 கிலோ மீட்டர் வரை உள்ள கிராமங்களில் இரவு பள்ளிகள் மற்றும் பகல் நேர பள்ளிகள் தொடங்கப்பட்டது. 1924 இல் 12 கிராமங்களில் கிறிஸ்தவர்கள் இருந்தனர். ஆறு புதிய கிராமங்களில் நற்செய்திப் பணி தொடங்கப்பட்டது.

## ஆனைமலை பகுதியில் தாழ்த்தப்பட்டோர் மத்தியில் கிறிஸ்தவம்




1920-1921 இல் மேற்கு தொடர்ச்சி மலையின் ஆனைமலைப் பகுதியில் 62 தேயிலை, காப்பி தோட்டங்கள் காணப்பட்டன. அதில் 15000 பேர் வேலை செய்தனர். அதில் 7000 பேர் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் பிறரில் பெரும்பான்மையோர் இந்து தாழ்த்தப்பட்டவர்கள் ஆவர். இந்து தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் நற்செய்தி பணி செய்யும் படியாக ஊழியர்கள் அனுப்பப்பட்டனர். நற்செய்தி பணியாளர்கள் ஒவ்வொருவரும் தேயிலைத் தோட்டங்களில் தங்கி நற்செய்தி பணி செய்து வந்தனர். இந்த வட்டாரத்திற்கு வால்பாறை தலைமை வகித்தது. அக்காலத்திலேயே வால்பாறையில் 400 பேர் அமர்ந்து ஆராதிக்கும் அளவிற்கு மரத்தால் அமைக்கப்பட்ட ஒரு பெரிய தேவாலயம் இருந்தது. நற்செய்திப் பணி செய்து இளவயதிலேயே மரணம் அடைந்த அருள்திரு. ஹென்றி எட்வின் பிளப்பி நினைவு தேவாலயம் என இதற்கு பெயரிடப்பட்டது. இந்த வட்டாரத்தில் ஏற்பட்ட மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் மூலம் 3,000 தாழ்த்தப்பட்ட இந்துக்கள் கிறிஸ்தவர்களாகி ஞானஸ்தானம் பெற்றனர்.

1923 இல் மேற்கு தமிழ்நாட்டில் மாதாரி என்ற அருந்ததியர் சமூகத்தினர் மத்தியில் ஏற்பட்ட மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம். 1923 ஆம் ஆண்டில் மாதாரி என்ற அருந்ததியர் சமூகத்தினர் மத்தியில்மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் தோன்றியது. 800 மாதாரி கிராமங்களில் சுமார் 30,000 பேர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டனர். தாராபுரம் வட்டாரத்தில் தேவனாம்பாளையம் என்ற கிராமத்தில் இருந்து இந்த மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் தோன்றியது. இந்த கிராமத்தில் 25 மாதாரி சமூக குடும்பங்கள் இருந்தன. அந்த குடும்பத்தைச் சார்ந்த தேவனாம்பாளையம் கோயில் பூசாரியான மாறன் மற்றும் அவருடைய நண்பர்கள் பழனி, நாச்சி ஆகியோர் சந்தைக்கு சென்ற பொழுது கிறிஸ்தவ ஊழியர்கள் கொடுத்த துண்டு கைப் பிரதிகள் மூலம் கிறிஸ்தவத்தை அறிந்தனர். அந்த வட்டாரத்தில் 1913 இல் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறி இருந்த ஆதிதிராவிடர் (பறையர்) சமூகத்தவரின் கல்வி, பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம், பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை உற்றுநோக்கிய மாதாரி சமூகத்தினர் தாங்களும் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற விரும்பினர். இவர்களோடு துணி வணிகத்திற்கு வந்திருந்த அழகன் என்பவர் ஏற்கனவே 1913 இல் ஆபிரகாம் என்ற பெயரில் திருமுழுக்கு பெற்றிருந்தார். இவர் கிறிஸ்தவத்தைக் குறித்து மாறன் மற்றும் அவரது நண்பர்களுக்கு தொடர்ந்து நற்செய்தியாக அறிவித்து வந்தார். அனைவரும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள் தாராபுரத்தில் உள்ள கிறிஸ்தவ ஊழியர்களிடம் சென்று தாங்கள் கிறிஸ்தவராக விரும்புவதை கூறினார்கள்.

1922 ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று தாராபுரத்திற்கு அருள்திரு. ஜே.ஜே. எல்லிஸ் ஐயரவர்களை நால்வரும் சந்தித்தனர். அருள்திரு. ஜே.ஜே. எல்லிஸ் ஐயரவர்கள் தேவனாம்பாளையத்திற்கு தாம் வருவதாக வாக்களித்தார். தாம் வாக்களித்தபடி தேவனாம்பாளையம் வந்து அவ்வூர் மக்களுக்கு கிறிஸ்தவ நற்செய்திகளையும் உண்மைகளையும் அவர் எடுத்து கூறினார். சில நாட்களில் ஊர் மக்களில் மாதாரி சமூக குடும்பங்கள் அனைவரும் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ள அவர்கள் அனைவருக்கும் திருமுழுக்கு கொடுக்க நாள் குறிக்கப்பட்டது. இந்த தகவலை அறிந்து கொண்ட உயர் சாதி நில உடைமையாளர்களாக இருந்த இந்துக்கள் அதை எதிர்த்தனர். அவர்களை கடுமையாக எச்சரித்தனர். தங்களது தோட்டங்களில் வேலை பார்க்க வாய்ப்பு மறுக்கப்படும் என்றனர். இரவு முழுவதும் வேலை செய்ய வேண்டும் என கட்டாயப்படுத்தினர். ஆனாலும் 25 குடும்பங்களும் திருமுழுக்கு பெற தயாரான நிலையில் முதன் முதலில் மாறன் தலைமையில் ஏழு பேர் 09. 11. 1923 அன்று அருள்திரு. ஜே ஜே எல்லிஸ் ஐயரவர்களிடம் திருமுழுக்கை பெற்றனர். இந்த நாளை 30 ஆயிரம் மாதாரி சமூக மக்கள் கிறிஸ்தவத்திற்கு மாறுவதற்கு தூண்டுதலாக இருந்த நாள் இந்த நாள் என்பதால் திருச்சி தஞ்சாவூர் திருமண்டலம் எங்கும் மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் தொடங்கிய நாளாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. 800 கிராமங்களில் வசித்த சுமார் 30,000 மாதாரி சமூக மக்கள் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். அந்த வட்டாரத்தில் ஏற்கனவே ஆதிதிராவிடர் (பறையர்) சமூகத்தினர் கூட்டம் கூட்டமாக கிறிஸ்தவத்தை கரூர் தாராபுரம் பெரம்பலூர் வட்டாரங்களில் 1913 ஆம் ஆண்டு முதல் ஏற்றுக்கொண்ட போதிலும் பெரும் கூட்டமாக மாதாரி இன மக்கள் 1923 ஆம் ஆண்டு சுமார் 30,000 பேர் கிறிஸ்தவத்தை வந்ததால் அந்த ஆண்டு மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் உருவான ஆண்டாக வரலாற்றில் குறிக்கப்படுகிறது.

மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கத்தின் நூற்றாண்டு நிறைவு (1923-2023) இந்த ஆண்டு 2023 தாராபுரம் வட்டாரத்தில் 1923 இல் ஏற்பட்ட அந்த மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல் கும்பல் இயக்கம் உருவான நூற்றாண்டு நிறைவு கொண்டாடப்பட்டு வருகிறது.




I.J ஜெபராஜ்

# சுவிசேஷபுரம் சபை மற்றும் கிராம வரலாறு

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருமண்டலத்தின் பாரம்பரியமிக்க கிறிஸ்தவ குடியேற்றங்களில் முக்கியமான கிராமம் சுவிசேஷபுரம். கனம் J.J. முல்லர் ஐயரவர்களின் முயற்சியினால் கனம் C.T.E. ரேனியஸ் அவர்களால் நிறுவப்பட்ட கிராமமே சுவிசேஷபுரம்.

1835க்கு பின்னர் ரேனியஸ் ஐயரை சார்ந்த மேல்பக்கத்தார் சபைகளில், திருநெல்வேலிக்கு மேற்குப் பகுதியில், தற்போதுள்ள நல்லூர், சுரண்டை, தென்காசி என்னும் பகுதிகளை உள்ளடக்கிய சுற்றுவட்டார பொறுப்புகளை கனம் ஷாப்ட்டர் ஐயர் கவனித்து வந்தார். திருநெல்வேலிக்கு கிழக்கு பகுதியில் தற்போது உள்ள இட்டமொழி, ஆனந்தபுரம், நெடுவிளை பகுதியிலும் தெற்கே பேர்ப்பிலான்குளம் பகுதிகளில் உள்ள சபைகளையும் விசாரனை செய்யவும், வழிநடத்தவும் இட்டமொழி அருகில் ஒரு மிஷன் மையம் அமைய வேண்டும் என கனம் ரேனியஸ் ஐயர் எண்ணினார்.

அச்சமயத்தில் இட்டமொழி அருகில் இருந்த கிருஷ்ணாபுரம் என்ற கிராமத்தில் புதிதாக கிறிஸ்து சபையில் சேர்க்கப்பட்ட மக்களுக்கு மற்ற மக்களாலும், திருடராலும் துன்பம் உண்டானது. ஜனங்கள் தங்கள் நகைகளை பனைமரங்களில் வைத்து பாதுகாக்க வேண்டிய நிலையில் இருந்தனர். இதை அறிந்த ரேனியஸ் ஐயரவர்கள் அங்கே ஒரு நிலத்தை வாங்கி அதில் கிறிஸ்தவர்களை குடியமர்த்த வேண்டும் என்று எண்ணினார். தாவீது உபதேசியாரின் நிலம் அங்கு இருப்பதை அறிந்து, குறைந்த விலைக்கு அவரிடம் நிலத்தை வாங்கி 1836ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ம் தேதி புதிய குடியேற்றத்தை நிறுவி, அப்புதிய குடியேற்றத்திற்கு **"சுவிசேஷபுரம்"** என்று பெயரிட்டார்.



அந்நிகழ்வில் ரேனியஸ் ஐயருடன் ஷாப்ட்டர் ஐயரும், முல்லர் ஐயரும், லண்டன் மிஷனரி சங்கத்தை சார்ந்த ரசல் ஐயரும் மற்றும் அநேக சபை ஊழியர்களும் பங்கு பெற்றனர். கிறிஸ்து சபையில் சேர்ந்த மக்களிடையே சமாதானம் நிலவ ஆரம்பித்தது.

ரேனியஸ் ஐயர், அப்புதிய குடியேற்றத்தை மிஷனின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளின் தலைமையிடமாக்கி முதல் குருவாக கனம் J.J.முல்லர் ஐயரவர்களை இங்கு பணி அமர்த்தினார். கனம் ரேனியஸ் ஐயர் மற்றும் முல்லர் ஆகியோர் முயற்சியினால் ஒரு சிற்றாலயமும் பங்களாவும் கட்டப்பட்டது. 1837 ம் ஆண்டில் திருமதி. கேத்தரின் முல்லர் (ரேனியஸ் ஐயரின் மகள்) அவர்கள் பெண்கள் போர்டிங் பள்ளி ஒன்றை நிறுவி நடத்தி வந்தார். நிதி பற்றாக்குறையினால் அப்பள்ளி மூடப்பட்ட நிலையில் பின்நாளில் வந்த திருமதி. எலிசபெத் சார்ஜென்ட் அம்மா அவர்களால் மீண்டும் செயல்பட ஆரம்பித்தது.

9 மேலை நாட்டு மிஷனரிகளும் அநேக சுதேச மிஷனரிகளும் இங்கு தங்கி இருந்து இறைப்பணி செய்துள்ளனர். கனம் ரேனியஸ் ஐயரின் மகனான சார்ல்ஸ் ரேனியஸ், பேராயர் எட்வர்ட் சார்ஜென்ட், கனம் P.P. ஷாப்ட்டர், பேராயர் ஸ்டீபன் நீல் அவர்களுடைய தந்தை மிஷனரி மருத்துவர் சார்லஸ் நீல் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கனம் சார்ஜென்ட் ஐயரவர்கள் 1842 முதல் 1851 வரை ஸ்தல குருவாக இருந்து பணி செய்தார். 1846-47 ல் கனம் சார்ஜென்ட் ஐயரவர்களால் ஒரு ஆண்கள் விடுதி பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. 1846ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் தேதி பாளையங்கோட்டையில் நிறுவப்பட்ட இறையியல் பள்ளி 1847 ல் திருநெல்வேலி நிறுவனம் என்று அதிகாரப்பூர்வ பெயர் பெற்று சுவிசேஷபுரத்திற்கு மாற்றப்பட்டு கனம் சார்ஜென்ட் ஐயரின் கீழ் செயல்பட்டது. 1849ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, திருநெல்வேலி திருமண்டல மாதாந்திர இதழும் தமிழின் முதல் மாத இதழுமான 'நற்போதகம்' மாத இதழ் கனம் சார்ஜென்ட் ஐயரவர்களால் சுவிசேஷபுரத்தில் இருந்து வெளிவர ஆரம்பித்தது. இப்போது உள்ள ஆலயம் கனம் சார்ஜென்ட் ஐயரவர்களால் 1847ல் அடிதளமிடப்பட்டு 1849 ல் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

1891 முதல் 1912 வரை கனம் P. G. சிமியோன் ஐயர் அவர்கள் ஸ்தல குருவாகவும், சுவிசேஷபுரம் சர்க்கிளின் முதல் சேர்மனாகவும் இருந்தார். கனம் ஐயரவர்கள் தன் இறுதி காலம் வரை இங்கு ஊழியத்தை நிறைவேற்றினார்கள். அவர்களுடைய கல்லறை ஆலயத்தின் பின் பகுதியில் உள்ளது.

1858 ம் ஆண்டு ஒரு ஆரம்ப பள்ளியும் பெண்கள் விடுதியும் ஆரம்பிக்கப்பட்டது. 1940ம் ஆண்டு அப்பள்ளி நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது.

தற்போது சுவிசேஷபுரம் சேகரமாக செயல்பட்டு வருகிறது. 8 சபைகளையும், 4 ஆரம்ப பள்ளிகளையும், 2 நடுநிலைப்பள்ளிகளையும் கொண்டுள்ளது. பேராயர் ஸ்டீபன் நீல் மிஷன் மருத்துவமனை, கேத்தரின் முல்லர் மகளிர் தையலகம் ஆகியவை ஆலய வளாகத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

**Name:** Tinnevelly Christian Historical Society

**A/c Number :** 1748 020000 3684

**Bank name :** Federal Bank

**IFSC code:** FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



ஆசிரியர்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com

# ஜுலை திங்களும் திருச்சபை தொண்டனும்

IJ ஜெபராஜ்

ஜுலை திங்கள் ஒன்றுபட்ட திருநெல்வேலி திருமண்டலத்திற்கு முக்கியமானதும் சிறப்பு வாய்ந்ததுமாகும். ஒவ்வொரு ஆண்டும் ஜுலை திங்கள் வருடாந்திர தோத்திர பண்டிகையும் மாம்பழச்சங்க பண்டிகையும் நம் மிஷனரிகள் வகுத்துத் தந்த வகையில் சிறப்பாக நடைபெறுகிறது. அதனால் நாம் ஆண்டவரின் அருளையும் அன்பையும் பெற்றிருக்கிறோம்.

1820ம் ஆண்டு ஜுலை திங்கள் 7ம் தேதி தம் அயராத உழைப்பாலும் மிஷனரி தாகத்தாலும் நெல்லை அப்போஸ்தலன் என்று பெயர் பெற்ற கனம் ரேனியஸ் ஐயர் திருநெல்வேலி மண்ணிற்கு வந்து சேர்ந்தார். மிஷனரி ரிங்கிள்தௌபெ காலத்திற்கு பிறகு சபை வளர்ச்சியில் சிறு தொய்வு ஏற்பட்ட இருண்ட காலமாக கருதப்பட்ட அந்நாட்களில் முதல் ஸீனிறீ சங்கத்தின் முதல் மிஷனரியாக வந்திறங்கினார் ரேனியஸ் ஐயர்.

கிறிஸ்து மார்க்க நற்செய்தி அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதையே தன் இலக்காக கொண்டிருந்த ரேனியஸ் ஐயர், தன்னை பலவழிகளில் ஆயத்தம் செய்து கொண்டார். எந்தெந்த வழிகளில் எல்லாம் நற்செய்தி அறிவிக்க முடியுமோ, அந்தந்த வழிகளில் எல்லாம் நற்செய்தியை மக்களிடம் கொண்டு போய் சேர்த்தார்.

துண்டுப்பிரதி ஊழியம்: ரேனியஸ் ஐயர் தாம் சென்று வரும் எல்லா இடங்களிலும் துண்டுப்பிரதிகளை விநியோகம் செய்தார். இதன் மூலம் எளிய மக்களுக்கும் நற்செய்தி சென்றடைந்தது. கல்வியறிவு இல்லாத மக்கள் துண்டுப்பிரதியின் செய்தியை அறிந்து கொள்ள தன் உதவியாளர் மூலம் அவர்களுக்கு உதவினார். இன்றும் துண்டுப்பிரதி ஊழியங்கள் சிறப்பாக நடைபெறுகிறது.

பாடசாலை ஊழியம்: பள்ளி மாணவர்களுக்கு கல்வியறிவோடு, இறையறிவும் ரேனியஸ் ஐயரால் கற்றுக் கொடுக்கப்பட்டது. 'ஞானோபதேசம்' என்கிற நூலின் வழியாக அவர்களுக்கு கடவுளைப் பற்றியும் பாவம், மன்னிப்பு, மீட்பு போன்ற கிறிஸ்து மார்க்க சத்தியங்கள் போதிக்கப்பட்டன.

தனிமனித ஊழியம்: கனம் ரேனியஸ் ஐயர் தான் சந்திக்கும் மனிதர்களிடம் தனித் தனியே பேசி அவர்களுக்கு கிறிஸ்துவின் அன்பையும், அவர்கள் சந்தேகங்களுக்கு விளக்கங்களையும் கொடுத்தார். கலந்துரையாடல்கள் அவருக்கு புதிய அனுபவத்தையும், உற்சாகத்தையும் கொடுத்தது. தனிமனித ஊழியம் மிகவும் பயனளிக்க கூடியது என்பதை அறிந்த ரேனியஸ் ஐயர் அதைத் தன் ஊழியத்தின் கடைசி வரை (வாழ்வின் கடைசி வரை) செய்து வந்தார்.

பின்தொடர் ஊழியம்: ரேனியஸ் ஐயர் நற்செய்தி அறிவித்த பின்னர் அம்மக்களை அதோடு விட்டுவிடுவது இல்லை. முதலில் அவர்களை கிறிஸ்து மார்க்க சபையில் இணைப்பதற்காக, ஒரு சபைஊழியரை அனுப்பி அவர்களை ஆயத்தம் செய்வார். பின்னர் திருமுழுக்கு கொடுத்து சபையில் இணைப்பார். அதோடு நின்றுவிடாமல் அடிக்கடி சென்று அச்சபையை விசுவாசத்தில் பெலப்படுத்துவார். மேலும் சபைகள் துன்பப்படுத்தப்படும் போது அவர்களுக்கு துணையாக நிற்பார். ரேனியஸ் ஐயர் செய்த பின்தொடர் ஊழியமே இன்றும் அநேக சபைகள் கிறிஸ்து மார்க்கத்தில் நிலைத்து நிற்க காரணம்.

செமினரி மாணவர்கள்: ரேனியஸ் ஐயர் செமினரி மாணவர்களையும் தன்னுடைய ஊழியத்தில் பயன்படுத்தினார். தான் செல்ல வேண்டிய கிராமத்திற்கு செமினரி மாணவர்களை முன்பதாகவே அனுப்பி எல்லா ஆயத்தங்களையும் செய்வார். முதல் இரண்டு ஆண்டுகள் இதில் எந்தவித பயனும் கிடைக்கவில்லை. ஆனால் இரண்டு ஆண்டுகள் கழித்து இம்முறையானது ரேனியஸ் ஐயரின் ஊழியத்தில் மிகவும் பயனுள்ளதாக மாறியது. எந்தவித தொடர்பும், உறவும் இல்லாத இம்மண்ணின் மக்களாகிய நம்மை இறைவனின் திருச்சபையில் இணைக்க, கனம் ரேனியஸ் ஐயர் எடுத்த முயற்சிகள் ஏராளம்.

அவருடைய தீராத ஆத்துமதாகத்தால் திருநெல்வேலியில் அவர் ஊழியம் செய்த சுமார் 18 ஆண்டுகளில் 371 திருச்சபைகளையும், 107 பள்ளிகளையும் நிறுவினார். மெஞ்ஞானபுரம், டோனாவூர், அடைக்கலாபுரம், கடாட்சபுரம், சத்தியநகரம், கிருபாபுரம், அன்பின் நகரம், ஆசீர்வாதபுரம், சுவிசேஷபுரம் போன்ற கிறிஸ்தவ குடியேற்றங்களையும் ஏற்படுத்தினார். திருச்சபைகள் சுயமாகவே தங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும்படி ஆலய பரிபாலன நிதித் திட்டம் (LCF) கைப்பிடி அரிசி காணிக்கை போன்ற திட்டங்களை வகுத்தார். கிறிஸ்து மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் மற்ற உலக மக்களை போல பிற வழிபாட்டிற்கு சென்று விசுவாசத்தை விட்டு விலகி விடக்கூடாதென்று எண்ணி மாம்பழச்சங்க பண்டிகை நடத்தினார்.

அத்தியாயம் 14

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

முனைவர் ஜான்சி பால்ராஜ்,
ஆசிரியர் , திருநெல்வேலி



பாலூட்ட வந்து போன தாய்மார்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்தது. ஒருசில பெண்கள் மட்டும்.. அதுவும் எப்போதாவது பயந்து பயந்து வந்து சென்றனர். தாய்ப்பாலுக்காக ஏங்கியழுத குழந்தைகளைப் பசியாற்ற முடியாமல் காப்பகம் முழுவதும் குழந்தைகளின் அழுகுரல் சத்தமாகவே கேட்டது. அதில் பனிமலர் என்ற ஒன்றரை மாதக் குழந்தைக்கு மாட்டுப் பால் ஒத்துக் கொள்ளாமல் வயிற்றுப் போக்கால் செத்துக் கொண்டிருந்தது. எந்த மருந்துகளுக்கும் கட்டுப்படவில்லை. ஏமி செய்வதறியாமல் துடிதுடித்து போனார்.

இவளை நான் சாக கொடுக்க மாட்டேன்... என்று கண்ணீர் வடிய வடிய குழந்தையை மார்போடு அணைத்தபடி வேக வேகமாக நடந்தார்... அவர் பின்னால் பொன்னம்மாளும் இரண்டு சிறுமிகளும் அழுதவாறே ஓடினர்.

டோனாவூரின் ஒரு தெருமுனையில் நின்றபடி, என் அன்பு தாய்மார்களே... செத்துக் கொண்டிருக்கும் என் குழந்தைக்கு யாராவது வந்து பால் தாருங்கள்... உங்கள் குழந்தைகளை நானும் என் தோழியரும் போன மாதம் பேதிக்கு தப்புவித்ததையாவது நினைத்துப் பாருங்கள்... யாரும் உதவாவிட்டால் நான் என் குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு எங்காவது கண் காணாத ஊருக்கு போய் விடுவேன்.

பிறகு நீங்கள் எங்களைத் தேடினாலும் உங்களால் கண்டு பிடிக்க முடியாது... என்று சத்தமிட்டு அழுதார். ஓர் உயிருக்காகப் போராடிய அந்த அழுகுரல் மூலை முடுக்குகளுக்குள் எல்லாம் முட்டி மோதி அதிர செய்தது. இரண்டு குடிசைகளுக்குள் இருந்து மூன்று பெண்கள் வெளியே வந்தார்கள்..ஆங்காங்கே இருந்தவர்களும் கூடினர். அவர்கள் எல்லோருடைய கண்களும் கலங்கியிருந்தது ...ஒருவித அச்சமும் குற்ற உணர்வும் கொண்டிருந்தனர்.

ஒருத்தி ஓடி வந்து குழந்தையை வாங்கி கொண்டு தன் குடிசைக்குள் ஓடினாள். குழந்தையின் அழுகை அமர்ந்தது. ஏமி தன் கண்களைத் துடைத்துக் கொண்டு அமைதலானார். நாங்கள் உங்களோடு வருகிறோம் அம்மா, பால் தர என்றனர்... அந்தப் பெண்கள். அன்று மட்டும் ஒன்பது பெண்கள் தொடர்ந்து தினமும் பால் கொடுக்க வருவதாக அந்த இடத்தில் வாக்கு கொடுத்தனர். ஆண்களும் அதற்கு சம்மதம் தெரிவித்தனர். ஓரளவு நிலைமை சரியானது. பசியாற்றி குழந்தையை கொண்டுவந்து கொடுத்தப் பெண் இன்றிலிருந்து நானும் வருவேன். எங்களை மன்னித்து விடுங்கள். எங்களை விட்டு எங்கேயும் போகாதீங்க அம்மா என்று குலுங்கி குலுங்கி அழுதாள். குழந்தையை அவளிடமிருந்து வாங்கி கொண்டாள் பொன்னம்மாள். ஏமி அந்தப் பெண்ணை அணைத்து அவள் தலையில் முத்தமிட்டாள். அனைவருக்கும் கைக்கூப்பி நன்றி தெரிவித்தார். அவரது கண்களிலிருந்து ஆனந்த கண்ணீர் வடிந்தது.

எங்களை விட்டு ஒருநாளும் எங்கும் போகாதீங்கம்மா... உங்க குழந்தைகளுக்கு எங்க வீட்டு பொம்பளைங்க பால் கொடுக்க வருவாங்க. எங்களை மன்னிச்சிருங்கம்மா என்றார். மனைவியை காலராவுக்கு பலி கொடுத்த கணவர் ஒருவர் உங்களால் தான் என் பிள்ளைகளும் நானும் உயிர் பிளைச்சோம் என்றார் அவர். மற்றவர்கள் என்ன சொல்வதென்றே தெரியாமல் தலை குனிந்து நின்றிருந்தனர். சரி, உங்கள் அன்பு எங்களோடு இருக்கும்வரை நாங்கள் உங்களோடுதான் இருப்போம்....

எங்களுக்கு வேற போக்கு ஏது!? நன்றிமா என்று கைக்கூப்பினார் அருகில் வந்து நின்ற தாய்மார்களைப் பார்த்தபடி.

இந்தச் சூழலில் உவாக்கர் உடன் இல்லாதது வேதனையை அதிகரித்தது. இன்னும் ஓரிரு நாட்களில் வந்து விடுவார் என்ற எதிர்பார்ப்பும் ஏமாற்றமாகவே இருந்தது. உவாக்கரிடமிருந்து கடிதம் தான் வந்தது. அதில், உவாக்கரின் மனைவி திடீரென உடல் நலம் குறைவடைந்து விட்டதாகவும் அதனால் மருத்துவமனையில் இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டிருந்தது. இன்னும் ஒரு வாரத்தில் வந்து விடலாம் என்றும் எழுதியிருந்தார். ஏமி கடிதத்தை வாசித்து தமிழில் கூறினார்.

அனைவரையும் சோகம் தொற்றிக் கொண்டது. உடனடியாக பர்தாவிற்காக சிறப்பு பிரார்த்தனை கூடுகை ஏற்படுத்தப்பட்டது. அனைவரும் கண்ணீர் மல்க ஜெப வேண்டுதல் செய்தனர். ஏமி கடிதம் கிடைத்த அன்றே ஆறுதலாக பதிலுக்கு கடிதம் எழுதி அஞ்சல் செய்தார். நாளை ஞாயிற்றுக் கிழமை. உவாக்கர் வந்திருப்பார் என நினைத்து சபைகளிலிருந்து உபதேசிகர்கள் சிறப்பு ஆலோசனைக் கூடுகைக்காக வருவார்கள். தடையின்றி ஆலோசனைக் கூட்டத்தை நடத்தியாக வேண்டும் என்றார் ஏமி.

கடவுள் நம்மோடு இருக்கிறார் இதுக்காக நாம் கவலைபட வேண்டாம்மா.... என்றாள் தேவாயி. ஆம்...கூடுகையை யாரை நடத்த சொல்வது என்று தான் யோசிக்கிறேன், நாளைய நாள் வீணாகிவிட கூடாதே என்றவர், போன வாரம் வந்த ஜெபக்குமார் உபதேசியாருக்கு தகவல் சொல்லி விடுவோமா? என்று அருகில் நின்ற தனது தோழிகளைப் பாரத்தார்.

அம்மா... நான் எனக்கு தோணுவதை சொல்லட்டா,என்றாள் பொன்னம்மாள்.

சொல்லுமா.. வேறு யாருக்கும் எந்த தகவலும் சொல்ல வேண்டாம். எல்லோரும் உவாக்கர் ஐயா இருப்பதாக நினைத்தே வரட்டும். வந்த பிறகு தெரிந்து கொள்ளட்டும். நாளை நீங்களே கூட்டத்தில் பேசுங்கம்மா. இங்கு வேறு யார் உங்களைவிட நல்லா பேசிற முடியும் என்றாள். பொன்னம்மா, நீ சொன்னதை தான் நானும் சொல்ல நினைத்தேன். நீங்களே பேசுங்கம்மா என்றாள் தேவாயி. சரி...அது தான் தேவ சித்தமென்றால் நானே பேசுகிறேன்... என்றார் ஏமி அமைதியாக.

மறுநாள் ஞாயிறு ஆராதனை முடிந்தது. எல்லா சபைகளிலும் வழக்கம் போல் வழிபாடு முடிந்ததும் உபதேசிகர்கள் டோனாவூருக்கு வந்தனர். திருமணமானவர்கள் தங்கள் மனைவியையும் அழைத்து வந்திருந்தனர். அவர்களோடு தேவதாசிமுறையை விரும்பாத மூன்று புதியவர்களும் வந்திருந்தனர். ஆக ஆண்கள் பதிமூன்று பேரும் பெண்கள் நான்கு பேரும் வந்திருந்தனர். அவர்களோடு உவாக்கர் நடத்திய உபதேசிகர் பயிற்சிப்பள்ளி மாணவர்கள் பதினொரு பேரும் பொன்னம்மாள், பரிபூரணம், தேவாயி, நட்சத்திரம் உட்பட ஒன்பது காப்பகத்திலுள்ளோரும் அதில் கலந்து கொண்டனர். ஏமி அனைவரையும் இன்முகத்தோடு வரவேற்றார். உவாக்கர் ஐயர் அடுத்த வார ஞாயிறு ஆராதனைக்கு வந்துவிடுவார் என்று நம்புகிறேன்...என்றார்.

பர்தாவிற்காக முதலில் அனைவரும் ஜெப வேண்டுதல் ஏறெடுத்து விட்டு பின்னர் ஏமி தனது உரையைத்தொடங்கினார். இன்று நான் உங்களோடு உரையாற்றுவேன் என்று நினைக்கவே இல்லை. இது கடவுளின் சித்தமென்று உணர்கிறேன் என்றார். அனைவரும் புன்முறுவலோடு அவரது பேச்சை கேட்க ஆவலோடு இருப்பதை அவர்கள் பார்வையும் ஆர்வமும் உணர்த்தியது.

அன்பு சகோதரர்களே, சகோதரிகளே... கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நான் சில நாட்களுக்கு முன்பு ஒரு கனவு கண்டேன். அதில் ஒரு ஆழமான கிணறு. அதற்குள் நிறைய சின்னஞ்சிறு பெண் குழந்தைகளும் சில தாய்மார்களும் இருந்தார்கள். அந்தக் கிணற்றில் தண்ணீர் இல்லை, சேரும் சகதியுமாக இருந்தது. அதற்குள் இருந்து காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்ற பெரும் சத்தம் வந்தது. அந்த வழியாக சென்ற நான் கிணற்றுக்குள் பார்த்தேன். அவர்கள் எல்லோரும் மேலே கையை நீட்டி என்னை வெளியில் தூக்கிவிடுங்கள் என்பதை போல கையசைத்து கத்தினார்கள். நான் என் கையை உள்ளே நீட்டினேன். ஆனால் அவர்கள் கைகளை என்னால் தொட முடியவில்லை. கிணறு ஆழமாக இருந்தது. உதவிக்கு வேறு யாராவது வருகிறார்களா என்று திரும்பி பார்க்கிறேன்... தொலைவில் இருந்து சிலர் வந்து கொண்டிருந்தார்கள். என் மனதிற்குள் எப்படியும் இனி இவர்களை காப்பாற்றி விடலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. நிஜத்திலும் பெருமூச்சு விட்டபடி விழித்துக் கொண்டேன்... என்று தனது கனவை அப்போது நடந்து கொண்டிருப்பதைப் போல தத்ரூபமாக உணர்ச்சித் ததும்பி கூறி முடித்தார் ஏமி.

எல்லோரும் விழி இமைக்காமல் ஏமியையே பார்த்துக் கொண்டிருந்தனர். எந்த இடத்திலும் திக்காமல் திணராமல் கோர்வையாக அவர் தமிழ் பேசியதும் ஆச்சரியமாக இருந்தது...அவர்களுக்கு. சகோதர சகோதரிகளே... இந்தக் கனவை விளக்கி சொல்லாமலே உங்களுக்கு புரிந்திருக்க வேண்டும். இரண்டு மூன்று தலைகள் ஆம் என்பதைப் போல ஆடியது.

ஏமி, கண்களை அகல விரித்து ஒவ்வொருவரின் கண்களையும் உன்னித்துப் பார்த்தபடியே, கிணற்றில் சேற்றிற்குள் கிடந்து தவிப்பது நாம் மீட்டு எடுக்க விரும்பும் பெண் குழந்தைகள். இவர்கள் தங்களைக் காப்பாற்றும்படி கதறுவதை என் செவிகள் இப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கிறது. அது என்னை தூங்க விடாமல் செய்கிறது. சாப்பிட விடாமல் தொந்தரவு செய்கிறது. என் வயிற்றில் பிறந்த குழந்தைகள் படுகுழிக்குள் விழுந்து கிடப்பதை போல என் உணர்வுகள் அவர்களுக்காக பொங்குகிறது. என்னால் நிம்மதியாக இருக்கவே முடியவில்லை.... என்று கையை நெஞ்சில் வைத்தபடி முகத்தை வானத்தைப் பார்த்து மூச்சிறைக்க கூறிய போது அவரது முகம் வேதனையால் நிரம்பி காதுகள் சிவந்திருந்தது. எல்லோருடைய இதயமும் ஒருவித பாரத்தால் நிறைந்து சோகம் தொண்டையை அடைத்து... கண்களில் நீரை நிரப்பியது.

ஆனால்....ஒன்று தெரியுமா...சகோதரிகளே!? நான் மட்டும் இதை ஒன்றும் செய்துவிட முடியாது. தூரத்தில் சிலர் வருவதை நான் கனவில் பார்த்தேனே.... அது தான் நீங்கள்.... என்று ஒவ்வோருவரையும் தன் ஆள்காட்டி விரலை நீட்டி

நீட்டி சுட்டிக் காட்டினார். இனிமேல்... நாம் இணைந்து அந்த பிஞ்சுகளை காப்பாற்றி விடலாம். முடியும்... நம்மால் முடியும்... நம்மோடு நம் கடவுள் இருக்கிறார். அவர்தான் எனக்கு இந்தக் கனவை தந்தது என்று நம்புகிறேன். அவர் செய்ய நினைப்பதை என்னிடம் என் மனவிருப்பமாக தந்திருக்கிறார்.

நான் உங்களிடம் தந்திருக்கிறேன் என்றார். அவர் பேச்சிலும் உடல் மொழியிலும் ஒரு இலட்சியவாதியின் முனைப்பும் உறுதியும் தெரிந்தது. அன்பர்களே...நான் சமயப் பணி செய்யாமல் வீண் வேலை செய்து கொண்டு அலைவதாக நமது மிஷனெரி சகோதரர்கள் தூற்றுவதை எண்ணி நான் கவலைப்பட போவதில்லை. இது தான் எனக்கு தெய்வப் பணியாக தெரிகிறது. இந்த நாட்டிற்கு கடவுள் என்னை அனுப்பியதன் நோக்கம் இதுதான் என்று நான் உணர்கிறேன்.

கேளுங்கள்... ஒரு குழந்தை காப்பாற்றப்பட்டால் அன்று தான் என் மனம் ஆனந்தம் அடைகிறது. ஒரு குழந்தை அழிந்து போனதை அறிந்தால் என் மனம் செத்து மடிகிறதே.., நான் என்ன செய்வது சொல்லுங்கள்...! ஒன்று தெரியுமா, உவாக்கர் ஐயா குன்னூர் கிளம்பி சென்ற அன்று, நானும் தேவாயும் களக்காடுவரை சென்று அவர்களை வழியனுப்பி விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தபோது... இரண்டு சிவ பக்தர்கள், பத்து அல்லது பதினொரு வயதிருக்கும் ஒரு பெண் குழந்தையை கையில் பிடித்துக் கொண்டு நடந்து சென்று கொண்டிருந்தனர். நான் அவர்களிடம் எங்கு சென்று கொண்டிருக்கிறீர்கள் ஐயா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இன்று மாலை இவளுக்கு எங்கள் கோவிலில் பொட்டுக் கட்டப் போகிறோம் அம்மா, நீங்களும் வாரியளா.. நிகழ்ச்சி தெய்வாகரமா இருக்கும் என்று மகிழ்ச்சிப் பொங்க கூறி கொண்டே நடந்தனர்.

அந்தப் பெண்ணும் தான் எதற்காக செல்கிறேன் என்று தெரியாமல் கசாப்புக் கடைக்குச் செல்லும் ஆட்டுக் குட்டியைப் போல உற்சாகமாக அவர்களோடு சென்று கொண்டிருந்தாள். ஆனால் என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அந்தக் காட்சி இன்றும் என் கண்ணை விட்டு அகலவே இல்லை. அன்று இரவு நாங்கள் கூடி ஜெபித்தோம், அழுதோம், புலம்பினோம். ஆனாலும் என்ன பயன். நாம் இதைப் பற்றி யாரையும் குறை கூறி கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. மாறாக நாம் செயல்பட்டாக வேண்டும். அப்போது தான் அறியாமையில் அழிந்து போகும் இந்தப் பெண்ணினத்தைக் காப்பாற்ற முடியும். இது ஒரு கண்மூடித் தனமான நம்பிக்கை என்பதை மக்களிடம் நாம் தான் எடுத்து கூற வேண்டும். ஆனால், எந்த விதத்திலும் அவர்கள் சமயத்தை குறைத்தோ இழிவுபடுத்தியோ பேசிவிடக் கூடாது.!

ஆம் தேவதாசி முறை ஆரம்பத்தில் மிகவும் புனிதமான நோக்கத்தோடுதான் ஏற்படுத்தப்பட்டது. மன்னர்களாலும் மக்களாலும் தேவதாசியர் மிகவும் மதிப்பிற்குரியவர்களாக நடத்தப்பட்டனர். அவர்களுக்கென்று சமூகத்தில் ஒரு சிறப்பான இடம் இருந்தது. கோயில்களின் நிர்வாகம் மன்னர்களது நேரடி பார்வையில் இருக்கும்வரை தேவதாசியர் மற்றவர்களின் உதவியை எதிர்பாராமல் மிகவும் சுதந்திரமாக்கவும் கண்ணியமாகவும் வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் தெய்வத்தொண்டாற்றுவதையே முழு நோக்கமாக இருந்தவர்கள். அவர்களுள் நிறையபேர் பல்வேறு சமுதாயப் பணிகளையும் செய்து மன்னர்களால் பரிசுகளாக வரிகளே செலுத்த வேண்டாத நிலங்களையும் பொன்னையும் பொருட்களையும் பெற்றிருக்கின்றனர். கோயில்களில் பணி செய்த தேவதாசியர்கள் அரசின் மிக முக்கிய உடமையாக வாழ்ந்தவர்கள். அவர்களுள் சிலர் குளங்களை வெட்டிக் கொடுத்தல், சீரமைத்தல் போன்ற சமூகப் பணிகளை செய்து மக்கள் மனதில் இன்றும் இடம் பிடித்திருக்கிறார்கள். ஆனால் இடையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றங்கள் மற்றும் சில தவறான மனிதர்களின் சுயநலத்தினால் தான் தேவதாசிமுறை இத்தகைய கேடான நிலமையை அடைந்திருக்கிறது. நான் அதன் முழு வரலாற்றையும் அறிவேன். எனவே நண்பர்களே எக்காரணம் கொண்டும் தேவதாசி முறையையோ அவர்களது சமய நம்பிக்கையையோ நாம் அவமதிக்க கூடாது.

சில மாதங்களுக்கு முன் ஒரு இளம் பெண்ணின் கணவன் காலராவால் இறந்து போனான். அவளது இரண்டு வயது பெண் குழந்தையை கோவிலுக்கு விற்று விடும்படி உறவினர்கள் வற்புறுத்தினர். முதலில் மறுத்த அவள். பிறகு தன்னைப் போல தன் குழந்தையும் ஒரு காலத்தில் விதவையாகி விடக் கூடாதென்ற பயத்தில், அவள் காலமெல்லாம் கடவுளின் மனைவியாகவே வாழட்டும் என்ற எண்ணத்தில் ஒத்துக் கொண்டாள். உடனே இரண்டு தேவதாசிகள் இதைக் கேள்விப்பட்டு அவளிடம் சென்று அந்தக் குழந்தைக்கு பேரம்பேசி விட்டு சென்றனர். இதை கேள்விப்பட்டதும்நானும்பொன்னம்மாளும்அந்தப்பெண்ணோடு பேசி குழந்தையை இங்கு கொண்டு வந்திவிடலாம் என்று எண்ணி சென்றோம். அந்தப் பெண்ணிடம் எல்லாவற்றையும் எடுத்து கூறினோம்.அவள் ஒருவித விரக்தியோடுதான் எங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டே இருந்தாள். எதுவுமே அவள் பேசாமலிருந்தாள். நான் சொன்னேன்...நீ கேட்கும் பணத்தை தருகிறேன். உன் குழந்தையை நீ எப்போது வேண்டுமானாலும் வந்து பார்த்துக் கொள்ளலாம். நீ விரும்பினால் அவள் வளர்ந்து பெரியவளானதும் உன்னோடு அழைத்தும் செல்லலாம் என்றேன்.

அவள் ஒருவித வெறுப்போடு என்னை ஏறெடுத்துப் பார்த்தபடி, உங்களுக்கு வேண்டுமானால் எங்கள் மத நம்பிக்கை தவறாக தெரியலாம். எங்களுக்கு அப்படி இல்ல. நான் கோவிலுக்கு என் தங்கத்தை கொடுப்பதாக வாக்கு கொடுத்திருக்கிறேன். என் முழு குடும்பத்தையே சொர்க்கத்திற்கு செல்ல இவள்தான் அந்தக் கோவிலில் வாழ்நாளெல்லாம் வேண்டுதல் செய்ய போகிறாள். இவளால்தான் குடியிலும், களவு, விபச்சாரம், பொய், புரட்டுன்னு வாழந்த என் புருசனையும் நரகத்துக்கு போக விடாமல் சொர்க்க வாசலை திறக்கப் போகிறாள். அதை தடுக்க உங்களுக்கு என்ன உரிமையிருக்கு. அப்படி நாங்கள் நம்புவதை ஏன் தவறு என்கிறீர்கள்? என்றாள். நான் இங்க பாருமா... என்று பேச தொடங்கவும்... அவள் வெளியே போங்கள்... இனி எதுவும் பேசினால் எனக்கு கெட்ட கோபம் வரும் என்றவள் எழுந்து போய்விட்டாள்.

ஆம்...வலியோடு வீடு திரும்பினோம். எனவே நமக்கு

நமது கொள்கைகள் எந்த அளவு பெரியதோ அப்படித் தானே அவர்கள் நம்பிக்கை அவர்களுக்கும் பெரிய விசயமாக இருக்க முடியும். எனவே மிக நுட்பமாக, ஞானமாக நடந்து கொள்ள வேண்டும் என்றார் ஏமி. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று உவாக்கர் ஒரு தமிழ் பழமொழியை சொல்லி என்னை உற்சாகப்படுத்துவார். நானும் அதையே நம்புகிறேன்... என்ற ஏமி, உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள் என்று கைக்கூப்பியபடி அவர்களோடு தரையில் அமர்ந்தார். கேட்ட அனைவரின் மனத்திலும் அவரது அந்தக் கனவும் உரையும் நிழற்படம் போல் ஒட்டிக்கொண்டது. நாங்கள் எல்லோருமே இந்தப் பணிக்காக தான் வந்திருக்கிறோம் அம்மா என்றாள் ஒரு பெண். எல்லோரும் எழுந்து நின்று. அந்தப் பெண்ணின் பேச்சை ஆதோதிப்பதைப் போல கைக்கூப்பி நின்றனர். கூட்டம் மதிய உணவுடன் முடிவடைந்தது. வந்த அனைவரும் ஏமியின் மனத்தாகத்தை தாங்களும் பெற்றுக் கொண்டு சென்றனர்.

சமுதாயத்தை மூடியிருந்த இருளை வெளிச்சமாக்கும் தீவெட்டிகளாய் தங்களை உணர்ந்தனர் அவர்கள். அவர்களது தெளிவான பேச்சும் ஆர்வமான நடக்கையும் ஏமியின் நம்பிக்கையை வலுவாக்கியது. அன்று ஏமி உவாக்கர் இல்லாத குறையை மிக அருமையாக நிரப்பியிருந்தார். தமிழ் கற்பிக்கும் ஆசான் உவாக்கர், ஏமி தமிழை சரியாக உச்சரிக்காமல் திணறும் போது அடிக்கடி திருத்தம் செய்வார். இன்று எங்கள் எல்லோரையிம் விட ஒரு பேச்சாளனை போல கம்பீரமாக பேசினீர்கள் அம்மா என்று பொன்னம்மாள் கூற... ஆம், ஆமா... எனக்கு நீங்க பேச பேச உடம்பெல்லாம் புல் அரித்து விட்டது என்றாள் தேவாயி.

ம்... நானல்ல...எனக்குள் இருந்த ஆண்டவர் அல்லவா பேசினார் ...என்றார் ஏமி. ஆமாம்...இனிமேல் எப்போதுமே ஆண்டவரே பேசட்டும் ,நீங்க பேசாதீங்கமா என்றாள் பரிபூரணம் சிரித்தபடி. ஏமி அவளை,பொய் கோபத்தோடு பார்க்க...

அதுக்கில்லமா... நம்ம உவாக்கரையா எந்தக் குறையும் சொல்ல மாட்டாரில்ல... அதுக்கு தான் சொன்னேன் என்றாள்... மீண்டும் செல்ல சிரிப்போடு... எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி.

பர்தாவிற்கு தான் என்ன ஆனதென்று தெரியல. ஆனா இப்ப ஒரு மாதமா அவுங்க அடிக்கடி கொஞ்சம் பலவீனமாகதான் தெரிந்தது. அடிக்கடி படுத்தே இருந்தாங்க.. என்றார் ஏமி. அந்த வார வியாழக்கிழமை, குன்னூரிலிருந்து ஒரு தந்தி வந்தது. அதில், நலம், சனி வருகிறோம் என்று இருந்தது. காப்பகமே மகிழ்ச்சியடைந்தது. திருநெல்வேலி ரெயில் நிலையத்திலிருந்து மாட்டு வண்டியில் சென்று அழைத்து வருவது வழக்கம். இந்தமுறை ஏமியும் உடன் கிளம்பினார். பர்தாவை சில மணி நேரத்திற்கு முன்பே பார்த்துவிடலாம் என்ற ஆசையில். அதிகாலை மூன்று மணிக்கே வண்டி டோனாவூரிலிருந்து புறப்பட்டது. ஆறுமணிக்கு முன்பே உவாக்கர் மனைவியோடு ரெயில் நிலையத்தில் இறங்கி காத்திருந்தார்.

ஏமியும் வண்டிகாரன் நடேசனும் அவர்களை அழைத்துவர உள்ளே சென்றனர். உவாக்கர் அங்கிருந்த ஒரு நீண்ட பலகை இருக்கையில் அமர்ந்திருக்க, பர்தா அவரது தோளில் சாய்ந்து கண் மூடியிருந்தார். ஓ..காட்.... பர்தா... ஏன் இவ்வளவு சோர்வாக... என்னாகிவிட்டது பர்தாவிற்கு!? பதறியபடியே ஓடி வந்து பர்தாவின் கையைப் பற்றினார் ஏமி. ஒன்றுமில்ல.... பயண களைப்புதான் ஏமி. இரவில் தூக்கமில்ல... என்றார் உவாக்கர். நடேசன் காப்பி வாங்கிவருகிறேன் என்றான். நாம வண்டிக்கே போயிறலாம்.. என்றார் உவாக்கர். பர்தா லேசாக தலையை தூக்கி ஏமியைப் பார்த்து குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள் என்றார்.மெல்லிய குரலில்.

எல்லோரும் நலம் தான் பர்தா, நீங்க தான் மிகவும் பலவீனமாக தெரிகிறீர்கள், கவலையாக இருக்கிறது என்றார். சரியாகிவிடும் என்றார் உவாக்கர். பர்தாவை கைத்தாங்கலாக வண்டிக்கு அழைத்து வந்து ஏற்றினர். வண்டியை ஓரங்கட்டிவிட்டு நடேசன் காலை சிற்றுண்டி விற்கும் இடத்திற்கு சென்றார். பர்தா வண்டியில் ஏறியதும் தலை சாய்க்க விரும்புவதை அவரது பார்வை காட்டியது. ஏமி, என் மடியில் தலைவைத்து கொள்ளுங்கள் பர்தா என்று சாய்த்து வசதியாக படுக்க செய்தார். உவாக்கர் எதிரில் அமர்ந்திருந்தார். முன்னெப்போதும் பார்த்திராத ஒரு சோகத்தை அவரது முகத்தில் ஏமி பார்த்தார். அண்ணன், என்ன, பர்தாவுக்கு? சொல்லுங்க...

ஏமியின் கண்கள் குளமாகியது. ஒன்றுமில்லமா... அங்கு சென்று சேர்ந்த அன்று பர்தா திடீரென்று மடக்கமடைந்து விட்டாள். வெயிலின் தாக்கமும் பயணக் களைப்பும்தான் என்று நினைத்தேன். மறுநாள் தூங்கியெழுந்ததும் குறைவாக உணவு சாப்பிட்டாள், ஆலயத்திற்கும் வந்தாள்.. இனி சரியாகிவிடும் என்று நினைத்தேன். ஆனால் அன்று மாலை திரும்பவும் மயக்க மடைந்து விழுந்து விட்டாள். உடனே அங்கிருந்த மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இரண்டு நாட்கள் மருத்துவமனையில் தான் இருந்தோம். பிறகு நாங்கள் தங்கியிருந்த அறைக்கு வந்தோம். அன்று மட்டும் ஓரளவு சரியானது போல தெரிந்தது. ஆனால் மீண்டும் நிலமை மோசமானது. ஊட்டியில் இருந்த மற்றொரு மருத்துவரிடம் செல்ல பரிந்துரைக்கப்பட்டோம். அங்கும் ஐந்து நாட்கள் தங்கியிருந்து சிகிச்சைப் பெற்றோம். ஆனாலும் என்னத்தினால் இந்த பலவீனம் என்று மருத்துவரால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

அந்த மருத்துவர் தந்த மருத்துவ தகவல்களை அவரது அனுமதியுடன் இங்கிலாந்தில் உள்ள எனது மருத்துவரான நண்பர் வில்லியம் ஜேம்ஸ்க்கு கடிதம் மூலம் தெரிவித்தேன். அவர் உடனே பர்தாவை அழைத்துவருமாறு தந்தி அனுப்பினார். உடனே உனக்கும் ஒரு தந்தி அனுப்பி விட்டு கிளம்பினோம். ஆனால் இப்போது சற்று பரவாயில்லை. இல்லை.... உடனடியாக பர்தாவை இங்கிலாந்து அழைத்துச் சென்றாக வேண்டும். சரியான பிறகு இருவரும் வாருங்கள் என்றார் ஏமி.பர்தாவின் கையை வருடியபடியே. ஆமாம்....இன்றும் நாளையும் ஓய்வெடுத்து விட்டு புறப்படுகிறோம் என்றார் உவாக்கர் பர்தாவை பார்த்தபடி..!

எத்தனை கம்பீரமான மனிதர்..! யாருக்கும் எதற்கும் அஞ்சா நெஞ்சர். எப்பேற்பட்ட சூழலையும் மிக எளிதாக கடந்து செல்பவர்... இன்று முதல் முறையாக உவாக்கர் சோகத்தோடு இருப்பதை கண்டு வேதனையோடு இதயத்தின் ஆழத்தில் மெளனமாக ஜெபம் செய்தார். வண்டி காலத்தைக் கிழித்து ஓடிக்கொண்டிருந்தது... அந்தக் கரடு முரடான பாதையில்!!

**தொடரும்...**




ஜா.ஜான் ஞானராஜ் கல்லிடைக்குறிச்சி

# சடையாண்டியூர் (சங்கரன்குடியிருப்பு) திருச்சபையின் சிறப்புமிகு வரலாறு

**சடையாண்டியூர் (சங்கரன்குடியிருப்பு) - அமைவிடம்**

திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்கு பகுதியில் திருநெல்வேலியில் இருந்து முக்கூடல் வழியாக தென்காசிக்கு செல்லும் மாநில நெடுஞ்சாலையில் சுமார் 35 கிலோமீட்டர் தொலைவில் சடையாண்டியூர், சங்கரன் குடியிருப்பு ஆகிய கிராமங்கள் அடுத்தடுத்து உள்ளன. கடையம் ஒன்றியத்தில் அணைந்த பெருமாள் நாடானூர் என்ற A.P.நாடானூர் கிராம பஞ்சாயத்து எல்லைக்குள் இவ்விரு கிராமங்களும் உள்ளன.

திருநெல்வேலி திருமண்டலம் நல்லூரை தலைமை இடமாகக் கொண்டு மேற்கு சபை மன்றத்தில் அம்பாசமுத்திரம் சேகரத்தில் சடையாண்டியூர் திருச்சபை இருந்து வந்தது. 2013 இல் இந்த திருச்சபை கல்லிடைக்குறிச்சி சேகரத்தில் இருந்து பிரிக்கப்பட்டு கடையம் சேகரத்தோடு சேர்க்கப்பட்டது. சங்கரன்குடியிருப்பு கிராம மக்களே சடையாண்டியூர் திருச்சபையின் அங்கத்தினர்கள்.

**பெயர் காரணம்**

சுமார் 170 ஆண்டுகளுக்கு முன்பாக ஆத்தியப்பன் என்ற சங்கரன் குடும்பமாக குடியேறியதால் அந்த இடம் சங்கரன் குடியிருப்பு என்று அழைக்கப்பட்டது. சங்கரன் குடியிருப்பு கிராமத்தில் ஆதிதிராவிடர் சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர்.

**துப்பாக்குடி கிராமத்தாரின் நெருக்கடி**

துப்பாக்குடியைச் சார்ந்த மறவர்களால் சங்கரன் குடியிருப்பு கிராமத்தினருக்கு கடும் நெருக்கடிகளும் தொல்லைகளும் கொடுக்கப்பட்டு வந்தது. அந்நேரம் சங்கரன் குடியிருப்பு கிராமத்தாருக்கு நற்செய்தி அறிவிக்கும்படியாக கத்தோலிக்க போதகர் பாப்பையா சுவாமிகள் வந்திருந்தார்கள்.

**பாப்பையா சுவாமிகளின் வருகையும் முதலாம் சமய மாற்றமும்**

அக்காலத்தில் சங்கரன்குடியிருப்பு கிராம மக்கள் அனைவரும் வரன் கொண்டார் அம்மன் என்ற குலதெய்வத்தை வணங்கி வழிபட்டதோடு அந்த அம்மன் பெயராலேயே கிராமத்தின் ஒரு பகுதிக்கு பட்டா வாங்கி குடியிருந்தனர். அவர்களுக்கு கிறிஸ்தவ நற்செய்தியை போதித்து வந்த கத்தோலிக்க கிறிஸ்தவ போதகரான பாப்பையா சுவாமிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், வட்ட ஆட்சி தலைவர் (தாசில்தார்) மத்தியில் நல்ல செல்வாக்கு இருந்தது. இவரது பெரும் முயற்சி காரணமாக துப்பாக்குடி கிராமத்தாரின் நெருக்கடியில் இருந்து சங்கரன் குடியிருப்பு கிராமத்து மக்களுக்கு விடுதலை கிடைத்தது. சங்கரன் குடியிருப்பு கிராமத்தின் பெரும்பான்மையான மக்கள் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள். இந்த சமய மாற்றம் 1910 களில் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

**சபை மாற்றமும் சடையாண்டியூர் திருச்சபை உருவாக்கமும்**

மதுரை மாவட்டம் தென்காசி பங்கு தந்தையின் மேற்பார்வையில் இருந்த சங்கரன்குடியிருப்பு திருச்சபையில் 1920 க்கும் 1930 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு பிரிவினை ஏற்பட்டது. அந்த பிரிவினைக்கான காரணம் இன்றளவும் மிக வியப்பாக அனைவராலும் பேசப்பட்டு வருகிறது. பனை ஓலையை மேற்கூரையாக கொண்ட கூரை கட்டிடமே அக்காலத்தில் கத்தோலிக்க தேவாலயமாக பள்ளிக்கூடமாக செயல்பட்டு வந்தது. அந்த ஓலைக் கட்டிடத்தை ஓடு போட்ட கல் கட்டிடமாக மாற்றும் படியாக பழைய கட்டிடம் அகற்றப்பட்டு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அஸ்திவாரம் இடும்படிக்கு வாணம் தோண்டப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு வந்த நேரத்தில் சங்கரன் குடியிருப்பு கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபையை சேர்ந்த மரியநாயகம் என்பவரது மனைவி குழலி என்பவருக்கும் அருளப்பன் என்பவருக்கும் இடையே

வாக்குவாதம் ஏற்பட்டது அந்த வாக்குவாதம் முற்றி சபையை இரண்டாக பிரித்தது. புதிய பிராட்டஸ்டன்ட் சி.எம்.எஸ்.சபை இங்கு உருவாக வழி வகுத்தது.

**மேல சுரண்டைக்கு உதவி கோரி செல்லுதல்**

அருளப்பன் தரப்பினர் சுரண்டை புராட்டஸ்டண்ட் சி.எம்.எஸ் சபையை சார்ந்த குருவானவரிடம் சென்று தங்களை புராட்டஸ்டண்ட் சி.எம்.எஸ். சபையில் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினார்கள். அவர் அம்பாசமுத்திரம் சேகர குருவானவருக்கு இது குறித்த தகவலை தெரிவித்தார். அம்பாசமுத்திரம் சேகர் குருவானவர் சங்கரன்குடியிருப்பு கிராமத்திற்கு வந்து அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப சி. எம். எஸ். புரோட்டஸ்டண்ட் சபையில் அவர்களனைவரையும் சேர்த்துக்கொண்டார். ஏற்கனவே சங்கரன்குடியிருப்பு கிராமத்தாருக்கும் புதுசுரண்டை என்று அழைக்கப்பட்ட மேல சுரண்டையைச் சேர்ந்தவர்களுக்கும் திருமண உறவுகள் இருந்தன. அருளப்பன் அவர்களது உறவினர்கள் புதுசுரண்டையில் ஆசிரியர்களாக உபதேசிமார்களாக சி. எம். எஸ். திருச்சபையில் இருந்து வந்தனர். அவர்களில் சாமுவேல் வாத்தியார் மனுவேல் வாத்தியார், மோசே, தானியேல் உபதேசியார் ஆகிய நான்கு சகோதரர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் நான்கு பேரும் புதுச்சுரண்டை என்றழைக்கப்படுகிற மேல சுரண்டையில் இருந்து வந்து சடையாண்டியூரில் பிராட்டஸ்டண்ட் சி.எம்.எஸ் திருச்சபை உருவாகிட உதவிகரமாக செயல்பட்டவர்கள். இதில் தானியேல் உபதேசியார் சடையாண்டியூர் திருச்சபையில் சபை ஊழியராகப் பணியாற்றி வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**இரண்டாம் சமய மாற்றம்**

மேலசுரண்டையிலிருந்து சடையாண்டியூருக்கு வந்த ஆசிரியர்களும் உபதேசிமார்களும் அம்பாசமுத்திரம் சேகர குருவானவருடன் இணைந்து ஊழியம் செய்ததின் காரணமாக சங்கரன்குடியிருப்பு கிராமத்தில் இருந்த இந்துக்களும் ஞானஸ்நானம் பெற்று சி.எம்.எஸ். கிறிஸ்தவர்களாக மாறினார்கள். புதிதாக சங்கரன்குடியிருப்பு கிராமத்தில் புராட்டஸ்டண்ட் சி.எம்.எஸ் திருச்சபைக்குள் இணைந்தவர்கள் தங்களுக்கு என்று தனி தேவாலயத்தையும் பள்ளிக்கூடத்தையும் உருவாக்க விரும்பி சங்கரன்குடியிருப்பு எல்லையை ஒட்டி இருந்த சடையாண்டியூர் கிராமத்தில் பெரிதானதோர் இடத்தை வாங்கினார்கள். அந்த இடம் சடையாண்டியூர் கிராமத்தில் இருந்து சங்கரன்குடியிருப்பு நோக்கி செல்லக்கூடிய பாதையின் வடபுறத்தில் சங்கரன்குடியிருப்பு கிராமத்திற்கு மேற்கே இருந்தது. அந்த வாங்கப்பட்ட பெரிதானதோர் இடத்தில் கிழக்கு நோக்கி கிழ மேலாக உள்ள நேர் தெருவை நோக்கி சி.எம்.எஸ் தேவாலயம் அமைக்கப்பட்டது. முதலில் ஓலை வேயப்பட்ட கூரை கட்டிடமே தேவாலயமாக மற்றும் பள்ளியாக செயல்பட்டு வந்தது.

**புதிய தேவாலயம்**

1940 ஆம் ஆண்டு அந்த ஓலைவேயப்பட்ட கூரை கட்டிடத்தை முழுவதுமாக அகற்றிவிட்டு ஓடு போட்ட கல் கட்டிடமாக தேவாலயத்தை மாற்றும்படிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஐந்து ஆண்டுகளாக தேவாலயக் கட்டுமானப் பணி நடைபெற்றது. 18.12.1945 அன்று நெல்லை பேராயர் ஜி. டி . செல்வின் அவர்களால் கிறிஸ்து ஆலயம் என்ற பெயரில் தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின்னர் அந்த தேவாலயம் தூய. ஸ்தேவான் ஆலயம் என்ற பெயரில் அழைக்கப்படலாயிற்று.

**தொடக்கப் பள்ளிக்கான தனி கட்டிடம்**

தொடக்க காலத்தில் தேவாலயத்தில் வைத்து டி.டி.டி.ஏ.தொடக்கப்பள்ளி செயல்பட்டு வந்தது. தேவாலயத்தில் இருந்து தொடக்கப் பள்ளியை தனியே பிரித்து தனி கட்டிடத்தில் நடத்துவதற்காக பெரிய அளவில் கட்டிடம் கட்டும்படிக்கு சடையாண்டியூரிலிருந்து சங்கரன்குடியிருப்புக்கு செல்லும் பாதையின் தென்புறத்தில் இடம் வாங்கப்பட்டு அந்த இடத்தில் தொடக்கப் பள்ளியும் சபை ஊழியர் தங்கி பணி செய்வதற்கான மிஷன் வீடும் கட்டப்பட்டது.

1961 இல் தொடக்கப் பள்ளிக்கான புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு 27.02.1962 அன்று அம்பாசமுத்திரம் சர்க்கிள் சேர்மன் அருள்திரு. எஸ். டி. டேனியல் ஐயரவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சடையாண்டியூர் திருச்சபை மக்கள் தேவாலயத்தை நேசிப்பது போல் மிஷன் பள்ளிக்கூடத்தையும் நேசித்து அதன் வளர்ச்சியில் நன்கு கவனம் செலுத்தி வருகின்றனர்.

**சடையாண்டியூர் திருச்சபையின் தொடக்க கால வளர்ச்சி**

சடையாண்டியூர் டி.டி.டி.ஏ. தொடக்கப்பள்ளியில் ஆசிரியர்களாக, தலைமை ஆசிரியர்களாக பணி செய்தவர்களே சடையாண்டியூர் தேவாலயத்தில் சபை ஊழியர்களாக பணி செய்து வந்தார்கள். தொடக்க காலத்தில் தாசன் உபதேசியார் சாமுவேல் உபதேசியார் சீனிவாசகம் உபதேசியார், இரத்தினம் உபதேசியார் ஆகியோர் இங்கு சிறப்பாக சபை ஊழியப் பணி செய்துள்ளார்கள் இவர்களில் இரத்தினம் உபதேசியார் சடையான்டியூர் திருச்சபையை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றிய அருளப்பன் என்பவரது மகன் ஆவார். இவர் சடையாண்டியூர் டி.டி.டி.ஏ. தொடக்கப்பள்ளியில் நீண்ட நாள் ஆசிரியராக பணியாற்றியதோடு பலமுறை இவ்வூரில் சபை ஊழியர் பணியையும் செய்துள்ளார்.

**இடைக்கால சபை வளர்ச்சி**

இடைக்காலத்தில் இசக்கி நயினார் என்ற ஐசக் ஆசிரியரின் மகன் எபநேசர் உபதேசியார், யாக்கோபு உபதேசியாரின் மகன் தாமஸ் சுந்தர்ராஜ் உபதேசியார், தேவாசீர்வாதம் உபதேசியாரின் மகன் ஜான் ஜேக்கப் உபதேசியார் ஆகியோர் இந்த திருச்சபையில் சிறப்பாக பணி செய்துள்ளனர். 1972 முதல் 1980 வரை சபை ஊழியராகப் பணி செய்த ஜான் ஜேக்கப் உபதேசியாரின் பணிக்காலத்தில் சடையாண்டியூர் திருச்சபை தேவாலயத்தில் தேவாலய ஆல்டர் கட்டப்பட்டது.

**1980க்கு பின்பான சபை வளர்ச்சி**

சீனிப்பாண்டியன் உபதேசியார், யாக்கோபு உபதேசியாரின் மகன் சாமுவேல் தேவராஜ் உபதேசியார், ஜான்சன் அய்யாப்பிள்ளை உபதேசியார், பால்ராஜ் சைமன் உபதேசியார் பழனிச்சாமி என்ற மோகன்தாஸ் உபதேசியார் தேவேந்திரன் உபதேசியார் ஆகியோர் இங்கு உபதேசியாராக பணி செய்துள்ளனர். பால்ராஜ் சைமன் உபதேசியார் காலத்தில் இங்கு முன் மண்டபம் முழுமையாக புதுப்பிக்கப்பட்டது. ஜான்சன் அய்யாப்பிள்ளை உபதேசியார் காலத்தில் ஒலிபெருக்கி

அமைக்கப்பட்டது. பழனிச்சாமி என்ற மோகன்தாஸ் உபதேசியார் காலத்தில் ஆலய வளாகத்தை சுற்றிலும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டது. 1983 - 1984 இல் அம்பாசமுத்திரம் சேகர குருவானவர் அருள்திரு. ஜே பி பட்ரிக் ஐயரவர்களின் முயற்சியால் 'காசா' நிறுவனத்தின் உதவியுடன் தேவாலய வளாகத்தில் கிணறு வெட்டப்பட்டது.

**தற்போதைய சபை மற்றும் தேவாலய வளர்ச்சி**

2001 நவம்பர் முதல் 2013 ஆகஸ்ட் வரை ம். ஜாண் ஜேக்கப் உபதேசியார் அவர்களின் மகன் திரு. மூ. ஜேக்சன் சாலமோன் உபதேசியார் இங்கு சபை ஊழியராகப் பணி செய்தார்கள். அவர்களது பணிக்காலத்தில் அருள் திரு. சாமுவேல் துரைராஜ் அவர்களால் தேவாலய விரிவாக்கம், தேவாலய கோபுரம் கட்டுவதற்கு ஏற்ற வகையிலான முன் மண்டபம் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இப்பணிகளுக்கு திரு. டேவிட், திரு.ஜோசப் மணிமாறன் ஆகியோர் பண பொறுப்பாளர்களாகவும் திரு. ஜான் கென்னடி, திரு. அல்போன்ஸ் அந்தோணி, திரு. எஸ்.பி.ஜி.மேசியா, திரு. ஸ்டீபன், திரு. தானியேல் ரத்தினம், திரு.தர்மர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட தேவாலய கட்டுமானக் கமிட்டி அமைக்கப்பட்டது. கல்லிடைக்குறிச்சி சேகர, மேற்கு சபை மன்ற, திருநெல்வேலி திருமண்டல செயற்குழு ஆகிய அனைத்தின் அனுமதி பெற்று சிறப்பாக பணிகள் செய்யப்பட்டது. 01.06. 2007 முதல் அருள்திரு. ஆபிரகாம் செல்வராஜ் ஐயரவர்கள் கல்லிடைக்குறிச்சி சேகர குருவானவராக பொறுப்பேற்றார்கள். அவர்களது முன்னிலையில் மூத்த குருவானவர் ஜே.பி. பட்ரிக் ஐயரவர்களால் 24.12.2007 இல் விரிவாக்கப்பட்ட தேவாலயம் மற்றும் புதிதாக கட்டப்பட்ட முன் மண்டபம் ஆகியவை பிரதிஷ்டை செய்யப்பட்டது. 2013 இல் சடையாண்டியூர் திருச்சபை கல்லிடைக்குறிச்சி சேகரத்திலிருந்து பிரிக்கப்பட்டு கடையம் சேகரத்தோடு சேர்க்கப்பட்டது. சுமார் 30 குடும்பத்தில் இந்த திருச்சபையில் உள்ளனர். இத்திருச்சபையைச் சார்ந்த அநேக குடும்பத்தினர் மும்பை, சென்னை, பாளையங்கோட்டை ஆகிய நகரங்களில் வசித்து வருகின்றனர். வெளியிடங்களில் வசிக்கிற இத்திருச்சபையின் பிள்ளைகள் இந்த திருச்சபையின் வளர்ச்சிக்கு பேருதவியாக செயல்பட்டு வருகின்றனர்.

**புதிய கட்டிடத்தில் தொடக்கப் பள்ளிக்கூடம்**

சடையாண்டியூர் டி.டி.டி.ஏ. தொடக்கப் பள்ளியின் பழைய கட்டிடம் முழுமையாக அகற்றப்பட்டது. புதிதாக கட்டப்பட்ட தொடக்கப்பள்ளி கட்டிடம் இந்த ஆண்டு நெல்லை பேராயர்.மகாகனம்.A.R.G.S.T.பர்னபாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது



வட இந்திய பகுதியான உத்தரகாண்ட் மாநிலத்தில் குடும்பமாக மிஷனெரி பணி செய்து வரும் அன்பு சகோதரர் சாம் சுதர்சன் அவர்களை சந்தித்து வட இந்திய பணித்தளங்களை குறித்து அனேக காரியங்களை பகிர்ந்து கொண்டார்கள் மற்றும் நம்முடைய வரலாற்று சங்க பணிகளை குறித்தும் அவர்களிடத்தில் பேசினேன் அவர்களை சந்தித்தது மிகுந்த மகிழ்ச்சி

G Pay

சந்தா அனுப்ப

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

## G-pay (Google Pay) மூலமாக சந்தா நன்கொடை அனுப்ப .....

'வரலாற்றுச் சுவடுகள்' – மாத ஆய்விதழுக்கென்று G-pay(Google Pay) மூலமாக நன்கொடை அனுப்ப விரும்புகிறவர்கள், 91767 80001 என்கிற இந்த எண் மூலமாகவும் அனுப்பலாம். நீங்கள் சந்தா நன்கொடை அனுப்பிய பின்பு, அதைக் குறித்த முழு விபரங்களை இதே எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WhatsApp மூலமாகவோ, அல்லது christianhistorical@gmail.com மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

# ஆதிச்சநல்லூர்:

## எதிர்காலம் கொண்ட வளமான கடந்த காலம்

ஜே. ஆஸ்டின் பென் தாஸ்
ஆராய்ச்சியாளர், சென்னைப் பல்கலைக்கழகம்
janustinben@gmail.com

ஆதிச்சநல்லூர் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஒரு தொல்லியல் தளமாகும். இது பல முக்கியமான தொல்பொருள் கண்டுபிடிப்புகளின் தளமாகும். ஆதிச்சநல்லூர் பகுதியில் இருந்து 2004-ம் ஆண்டு தோண்டப்பட்ட மாதிரிகளின் கார்பன் டேட்டிங் மூலம் அவை கி.மு.905 முதல் கி.மு.696 க்கு இடைப்பட்ட காலத்தை சேர்ந்தவை என தெரியவந்துள்ளது. முற்கால பாண்டிய அரசின் தலைநகரான கொற்கை ஆதிச்சநல்லூரில் இருந்து சுமார் 15 கி.மீ தொலைவில் உள்ளது.

பாண்டிய ராஜ்ஜியம் தென்னிந்தியாவில் அறியப்படாத பழமை வாய்ந்த ஒரு பண்டைய தமிழ் மாநிலமாகும். பாண்டியர்கள் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி வரை தமிழ் நாட்டை ஆண்ட மூன்று பழங்கால தமிழ் பேரரசுகளில் ஒன்றாகும் (மற்ற இரண்டு சோழர் மற்றும் சேரர்). பாண்டிய வம்சம் இந்திய தீபகற்பத்தின் தென்முனையில் உள்ள துறைமுகமான கொற்கையில் இருந்து ஆட்சி செய்து பின்னர் மதுரைக்கு குடிபெயர்ந்தது. சங்க காலத்தின் முற்காலப் பாண்டியர்கள் பண்டைய தமிழ் நாட்டின் முக்கிய ராஜ்ஜியங்களில் ஒன்றாகும். முற்கால பாண்டிய ராஜ்ஜியம் மேற்கில் திருவிதாங்கூர், வடக்கே வெள்ளாறு, கிழக்கு மற்றும் தெற்கில் கடல் வரை பரவியது.

இந்த தளத்தில் மனித மண்டை ஓடுகள், எலும்புகள், எலும்புக்கூடுகள், நெல் நெல் உமிகள் மற்றும் கற்காலத்தின் செல்ட்ஸ் ஆகியவற்றைக் கொண்ட கலசங்கள் கிடைத்துள்ளன. எச்சங்கள் கிமு 500 முதல் கிமு 200 காலகட்டத்தைச் சேர்ந்தவை.

1876 ஆம் ஆண்டு முதல், இந்த தளத்தில் இருந்து ஜெர்மன் ஆய்வாளர் டாக்டர். எஃப். ஜாகோர் (Dr. F. Jagor) அகழ்வாராய்ச்சிகள் மூலம் வியக்கத்தக்க கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்தார். அவற்றை மீண்டும் பெர்லினில் உள்ள ஒரு அருங்காட்சியகத்திற்கு கொண்டு சென்றார்.

அலெக்சாண்டர் ரியா (Alexander Rea) ஆதிச்சநல்லூரில் தனது பணிக்காக அறியப்பட்டவர். அவர் 1902 இல் தென்னிந்தியாவின் முதல் தொல்பொருள் ஆய்வுக் கண்காணிப்பாளராக இருந்தார். ரியா கண்டுபிடித்த அனைத்து தொல்பொருட்களும் உடனடியாக பட்டியலிடப்பட்டு 1915 ஆம் ஆண்டு ‘ஆதிச்சநல்லூர் மற்றும் பெரம்பைரிலிருந்து வரலாற்றுக்கு முந்தைய பழங்காலங்களின் பட்டியல்‘ என்ற தலைப்பில் ஆவணப்படுத்தப்பட்டது.

ஆதிச்சநல்லூரில் பெருங்கற்கால (மெகாலிதிக்) புதைகுழிகள் உள்ள இடம் 1904 ஆம் ஆண்டு நினைவுச் சின்னங்கள் மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1921 ஆம் ஆண்டு முதல் ASI ஆல் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இது இந்தியாவில் தோண்டப்பட்ட முதல் தளமாகும். இந்த தொல்லியல் தளம், 1876 ஆம் ஆண்டில் ஜெர்மனியைச் சேர்ந்த ஆண்டிவ் ஜாகோரால் தோண்டப்பட்டது. ஆதிச்சநல்லூர் பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் கார்பன் டேட்டிங் மூலம் கிமு 905 முதல் கிமு 696 வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை எனத் தெரியவந்துள்ளது. 2005 ஆம் ஆண்டில், மனித எலும்புக்கூடுகளைக் கொண்ட சுமார் 169 களிமண் கலசங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, அவை குறைந்தது 3,800 ஆண்டுகளுக்கு முந்தையவை.

**ஆதிச்சநல்லூரில் உள்ள முக்கியமான தொல்லியல் கண்டுபிடிப்புகள்**

ஆதிச்சநல்லூரில் மனித மண்டை ஓடுகள் மற்றும் எலும்புகள் அடங்கிய கலசங்கள், தேரில் செல்லும் மனிதனின் வெண்கலச் சிலை, தங்கம் மற்றும் வெண்கலப் பொருட்கள் மற்றும்

தொல்பொருள் கண்டுபிடிப்புகளின் பொக்கிஷம் ஆகியவை ஆதிச்சநல்லூரில் உள்ள சில முக்கியமான தொல்பொருள் கண்டுபிடிப்புகளில் அடங்கும்.

ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட கலசங்களில் மனித மண்டை ஓடுகள் மற்றும் எலும்புகள் இருப்பதால் அவை புதைக்கப்பட்ட கலசங்கள் என்று நம்பப்படுகிறது. ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட கலசங்கள், மத்தியப் பிரதேசத்தில் உள்ள மால்வாவில் கிடைத்த புதைகுழிகளை ஒத்திருப்பதால், இரு பகுதிகளுக்கும் இடையே வர்த்தக தொடர்புகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆதிச்சநல்லூர் தளத்தில் பணிபுரியும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால், சுமார் நான்கு அடி உயரத்தில் ஒரு பெரிய மூடியுடன் கூடிய புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆதிச்சநல்லூர் மட்டுமின்றி இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் உள்ள பெருங்கற்கால மனிதனின் இயற்பியல் மானுடவியலைப் புரிந்து கொள்ள விலங்கியல் மற்றும் மானுடவியலாளர்களால் ஆய்வு செய்யப்பட்டதால் ஆதிச்சநல்லூரில் கிடைத்த மனித மண்டை ஓடுகள் குறிப்பிடத்தக்கவை. மண்டை ஓடுகளை பிரிட்டிஷ் விலங்கியல் நிபுணரான சாலமன் ஜுக்கர்மேன் (Solomon Zuckerman) ஆய்வு செய்தார், அவர் மற்றொரு குறிப்பிடத்தக்க பகுப்பாய்வு செய்தார். ஆதிச்சநல்லூரில் தோண்டியெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் தற்காலத் தமிழ் மக்களின் வாழ்வியல் அமைப்போடு ஒத்துப் போகவில்லை. உதாரணமாக, பல மண்டை ஓடுகளின் தாடைகள் நீண்டு இருந்தது, வழக்கமான தமிழ் அல்லது தென்னிந்தியாவைக் காட்டிலும் ஆஸ்திரேலிய பழங்குடியினர் அல்லது கறுப்பின ஆப்பிரிக்கர்களின் தாடைகளுடன் பொருந்துவதாகத் தோன்றியது.

1899 முதல் 1905 வரை ஆதிச்சநல்லூரில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் 20க்கும் மேற்பட்ட தங்கக் கயிறுகள் மற்றும் முகப்புகளை கண்டுபிடித்துள்ளனர். சமீபத்தில், 2022 ஆம் ஆண்டில், தாமிரபரணி கரையோரத்தில் ஐகானிக் அருங்காட்சியகத் திட்டத்திற்காக அகழாய்வு செய்தபோது, அந்த இடத்தில் தங்கக் காதணி கண்டுபிடிக்கப்பட்டது. ஆதிச்சநல்லூரில் தங்க ஆபரணங்களைத் தவிர, வெண்கலம் மற்றும் பிற பொருட்களால் செய்யப்பட்ட காதணிகள், நெக்லஸ்கள் மற்றும் வளையல்கள் உட்பட பல ஆபரணங்களை கண்டுபிடிக்கப்பட்டது.

ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட வெண்கலப் பொருட்களில் சிலைகள், சடங்குப் பொருட்கள் மற்றும் கத்திகள் மற்றும் ஈட்டிகள் போன்ற ஆயுதங்கள் அடங்கும். ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட உள்ளங்கை அளவிலான வெண்கலச் சிலை கருவுறுதலைக் குறிக்கும் ஒரு தாய் தெய்வத்தைக் குறிக்கிறது. ஆதிச்சநல்லூரின் இரும்புக் கால புதைகுழிகளில் இருந்து உயர் தகரம் கொண்ட வெண்கலத்தின் வடிகட்டித் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சியில் முதன்முறையாக குழந்தைக்கான முதுமக்கள் தாழியில் வெண்கல வளையல்கள் கிடைத்தன.

**எதிர்கால வளர்ச்சி**

ஆதிச்சநல்லூரை உலக அளவில் அடையாளம் காணக்கூடிய முயற்சிகள் நடந்து வருகின்றன. திருச்செந்தூர் நெடுஞ்சாலையில் உள்ள ஆதிச்சநல்லூரை பிரபலமான சுற்றுலா தளமாக மேம்படுத்த மத்திய அரசு விரும்புகிறது. ஆதிச்சநல்லூரை ஆன்-சைட் மியூசியமாகவும் மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். 2020 ஆம் ஆண்டில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்திய அரசு அருங்காட்சியகங்களை உருவாக்கும் ஐந்து முக்கிய இடங்களில் ஆதிச்சநல்லூரும் ஒன்றாக இருக்கும் என்று பட்ஜெட்டில் அறிவித்தார். கிமு 905 முதல் கிமு 696 வரை தாமிரபரணி நீர்வழிக்கு அருகில் வாழ்ந்த நாகரீக சமுதாயத்தைச் சேர்ந்த தொல்பொருள் காட்டப்படும். கண்டுபிடிப்புகள் அருங்காட்சியகத்தில் சிறப்பித்து காட்டப்படும்.



# பண்டிகைத் தார்மீகம்

த.ஜான்சி பால்ராஜ். திருநெல்வேலி.



மனித வரலாற்றில் பண்டிகைகள் அல்லது திருவிழாக்கள் என்பவை மக்கள் தங்களது மகிழ்ச்சியை ஒன்றுகூடி வெளிப்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. நாகரீக காலம் என்று அறியப்படும் மக்கள் நிலையாக ஓரிடத்தில் வாழ முற்பட்டதிலிருந்தே இப்பழக்கம் தொடங்கியிருக்க வேண்டும். அதற்கும் முன்பே நாடோடி வாழ்க்கையிலும் கூட ஏதோ ஒரு விதத்தில் தங்களது சுகத் துக்கங்களை ஒன்றுகூடி பகிர்ந்து கொள்ளும் தன்மை இருந்திருக்கவும் வாய்ப்புள்ளது. நிறைவையும் ஆனந்தத்தையுமே விரும்பும் மனித மனம் வயது வேறுபாடின்றி ஏதோ ஒன்றினை மையமாக வைத்துக் கொண்டு மகிழும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது என்பதில் மாற்றுக்கருத்திருக்க வாய்ப்பில்லை. உண்ணுதல், மகிழ்ந்திருத்தல், கொண்டாடுதல் போன்ற ஒருமித்த நோக்கங்களே மனிதனின் தேடல். எனவே இவற்றை முதன்மையாக வைத்து ஏற்படுத்திக்கொள்ளும் பண்டிகைகள் மனித வாழ்வில் முக்கிய இடம் வகிக்கின்றன.

ஆரம்ப காலங்களில் மகிழ்ந்திருத்தல் என்ற ஒற்றை நோக்கிற்காக மட்டுமே கூடிக் களித்த இம்மனிதர்களின் கூடுகையானது காலப் போக்கில் சமயத்தோடு தொடர்புடையதாக மாற்றங்கண்டது. மக்கள் தங்கள் நம்பிக்கைகளுக்கு ஏற்ப, குறிப்பிட்ட நாட்களில், குறிக்கப்பட்ட இடங்களில் கூடிக் கொண்டாடி வருகின்றனர். இப்பண்டிகைகள் மனிதர்களின் கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் பொருளாதாரம் போன்றவற்றை பிரதிபலிக்கின்றன. பின்னாட்களில் இந்தியக் கலாச்சாரத்தில் சாதியம் தலைதூக்கிய காலகட்டங்களிலிருந்து இப்பண்டிகைகள் புதிய பரிமாணங்களை வெளிப்படுத்தி மக்களின் இயல்பான மகிழ்ச்சியின் அடர்வை குறைத்து, சமூகத்தின் சாதிய ஏற்றத் தாழ்வுகளுக்கு அடையாளங்களாகிப்போனது.

மக்கள் உருவாக்கிக் கொண்ட தெய்வங்களும் சாதிக்கொன்றாகப் பிரிக்கப்பட்டு அவைகளுக்கு அளிக்கப்படும் மரியாதைகளும் ஆராதனைகளும் கூட அன்றிருந்த ஆதிக்க சாதியினரால் வரையறுக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டன. இதனால் பண்டிகைகளின் சுதந்திரமும் நோக்கமும் திசைமாறி சடங்காச்சாரமாகிப் போனதில் வியப்பில்லை. கீழ்மக்களாகப் புறந்தள்ளப்பட்டு ஆதிக்கச் சாதியினரின் அடிமைகளாக வாழ்ந்துவந்த பாமரர்கள் பண்டிகைகளில் எழுப்பப்படும் ஆரவார தொனிக் கூட, செவியல் விழுந்துவிடக் கூடாத தொலைவில் வாழவேண்டிய அவலம்..!

சாதிக்கொரு எல்லை வகுக்கப்பட்டு, கோயில் வளாகத்திற்கு வெளியே இருக்கும் வர்க்கத்தினர், உள்ளே வரத்தக்கவர்கள், உள்ளேயும் குறிப்பிட்ட இடத்திற்கு மேல் செல்லத் தகாதவர்கள், தெய்வத்தை தொட்டு அர்ச்சனைசெய்யத் தகுந்தவர்கள் என்ற பல அடுக்கு நிலைப்பாடே, பல நூறு ஆண்டுகளாக சமூகத்தின் கொடுமையான தன்மைகளாகிப்போனது. மேளதாளம் முழங்கி இசையில் இலகித்து மகிழும் பாக்கியம் ஆதிக்கவர்க்கத்தினருக்கே உரியதென்ற கட்டமைப்பு வலுபெற்றது. அன்றாட உணவிற்கே அடிமைப்பட வேண்டிய நிலையிலிருந்தோர் தாங்கள் வழிபட்ட தெய்வங்களுக்கு பண்டிகைகள் கொண்டாடி மகிழ நேரமோ பொருளாதார வசதியோ இன்றியும் தவித்தனர். இந்நிலையில்

பண்டிகைகள் உயர் வர்க்கத்தினரின் வணிக கலாச்சாரமாகிக் கொண்டிருந்தது.

அநீதியான இச்சாதிய கட்டமைப்பைக் கண்டு நொந்த கடவுளோ இதற்கு விடிவு கொண்டுவர விரும்பியிருந்தார். ஆம்… இந்தியாவில் கிறிஸ்தவம் நுழைந்தபோது பண்டிகைகள் சமத்துவமடைய முற்பட்டன. இயல்பாகவே மகிழ்ச்சியை விரும்பும் மனித மனங்கள் சமத்துவத்தைப் பரிசளிக்க விழைந்த கிறிஸ்தவத்தின் வருகையை ஆதரித்தன. அதிலும் சீர்திருத்த கிறிஸ்தவம் இந்தியாவிற்குள் வந்த பதினெட்டாம் நூற்றாண்டில் ஒதுக்கப்பட்டப் பாமர மக்களின் பொற்காலமாக அமைந்தது.

ஐரோப்பிய கிறிஸ்தவ மிஷனெரிகள் தங்கள் நாட்டில் எங்கும் கண்டிராத இந்தச் சாதிய அமைப்பையும் அதற்கான அடிப்படை காரணங்களையும் கண்டு வியந்ததோடு அடிமைப்பட்டுக்கிடந்த மக்களை ஆதரித்து அவர்களது அறியாமையை அகற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்றனர். அத்தோடு கிறிஸ்தவத்தில் எவ்வித பாகுபாடுமற்ற விதத்தில் பண்டிகைகளை அனைவரும் கொண்டாடி மகிழலாம் என்ற உண்மையை எடுத்துரைத்தனர்.

விவிலியத்தில் அதன் கோட்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு பண்டிகைகளைப் பற்றின செய்திகளும் அவற்றைக் கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டிய அவசியமும் குறிப்பிடப்படுள்ளது ( லேவி:23:41) அதன்படி, பஸ்காபண்டிகை, முதற்பலன்களின் பண்டிகை, புளிப்பில்லா அப்ப பண்டிகை, எக்காள பண்டிகை, பாவநிவிர்த்திப் பண்டிகை, கூடாரப் பண்டிகை, பெந்தேகோஸ்தே பண்டிகை முதலிய ஏழு பண்டிகைகளை மக்கள் ஆசரித்தனர். இப்பண்டிகைகளை கட்டாயம் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாட வேண்டும் என்று கட்டளையாகவே மோசே தெரிவித்தருக்கிறார்.

இதனடிப்படையில் ஆரம்ப காலகட்டத்தில் இந்தியக் கிறிஸ்தவர்கள் அந்தந்த மக்களின் மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகிய முறைமைகளின் அடிப்படையில் சிற்சில மாற்றங்களோடு அதே நேரம் எவ்வித பாகுபாடும் இன்றி இறைவழிபாட்டு முறைமைகளோடு கொண்டாடினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் குளோரிந்தாள் அம்மையார், சுவாட்ஸ் ஐயர், கற்பகம் சத்தியநாதன், தாவீது சுந்தரானந்தன் போன்றோரால் மிகக் குறுகிய காலகட்டத்தில் ஏற்பட்ட திரள் கூட்ட மக்களின் கிறிஸ்தவ சமய ஏற்பிற்கான முதன்மையான காரணம் தாழ்த்தப்பட்ட மக்களது சமத்துவத்தைப் பெற ஏங்கிய அவர்களது மனநிலையே!

அதற்கு கிறிஸ்தவ சமய கோட்பாடுகளில் இருந்த ஏழை எளியவர்களுக்கான ஆதரவும் ( விவிலியம் (லூக்: 6:24-25) ) சாதிப் பாகுபாடுகளற்ற தன்மையின் எதிரொலிப்புமே முக்கிய காரணமாக அமைந்திருந்தது. அன்றைய மேல்மட்டத்தினருக்கான சமயக் கொள்கைகள் அடித்தள மக்களைப் புறந்தள்ளுவதாக இருந்ததால் சமத்துவத்தைப் போதித்து, ஏழை எளியோரை அரவணைத்த கிறித்தவம் அத்தகையோரால் பெருமளவில் வரவேற்கப்பட்டதில் ஆச்சரியம் ஏதுமில்லை. இதனால் கிறித்தவ முறைமையின்படி நிகழ்த்தப்பட்ட சமய விழாக்கள், புதியக் கிறித்தவச் சமய ஏற்ப்பாளர்களால் தங்களது பழைய சமய வழிபாட்டு முறைமைகளின் சாயலிலும்… அதே சமயம் கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரண்படாமலும் பண்டிகைகளைக் கொண்டாடினர்.

குறிப்பாக ஐரோப்பியர்களின் வருகையின் போது திருநெல்வேலி மாவட்டம் என்பது இன்றைய தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது. அப்பகுதிகளில் நாட்டார் தெய்வ வழிபாட்டு முறைகளின்படி விலங்குகளைப் பலியிட்டுக் கொண்டாடுதல் வழக்கமான மரபு. அதன்படி கிறித்தவத்தில் உயிர்பலிகள் கூடாதெனினும் ஆண்டுக்கு ஒருமுறை திருநெல்வேலி திருமண்டலத்தில் நடைபெற்று வரும் மாம்பழச்சங்க பண்டிகை, அது தொடங்கப்பட்ட காலகட்டத்தில் (கி.பி 1834) அக்காலத்திய கிறித்தவர்கள் தாங்கள் இருந்து வந்த பழைய மத விழாக்களை (ஆனி, ஆடி மாதம்) மறக்க இயலாமல் கிறித்தவர்களான பின்னரும் அதே மாதங்களில் கிறித்தவக் கோட்பாடுகளினடிப்படையில் விழாக்களாகக் கொண்டாடி தங்களது இயல்பான மன விருப்பங்களை நிறைவேற்றிக் கொண்டனர் .

இதன்படி அத்திருமண்டலத்தைச் சேர்ந்த அனைத்து திருச்சபையினரும் ஒரே இடத்தில் (பேராலயத்தில்) மூன்று நாட்கள் கூடி உணவிற்காக ஆடுகளை வெட்டி சமைத்து உண்டு பின்னர் வீடுகளுக்கு செல்வர். மாட்டு வண்டிகளில் குடும்பமாக பயணித்துச் செல்லும் இம்மக்கள் வீடு திரும்பும் போது வில்வண்டிகளின் மேற்கூரையில் ஆட்டுத் தோல்களை விரித்து காயவைத்தபடி தங்களது பண்டிகை கொண்டாட்டத்தை வெளிப்படுத்தும் முகமாக செல்வர்.

பின்னர் மிஷனெரி உவாக்கர் ஐயரால் 1891 ல் முதன்முதலாக சிவகாசி சாட்சியாபுரத்தில் ஸ்தோத்திரப் பண்டிகை என்ற பெயரில் தொடங்கப்பட்டது. அப்பண்டிகையில் மக்களின் பங்களிப்பும் மட்டில்லா மகிழ்ச்சியின் எதிரொலிப்பும் ஏனைய சபையினரையும் இத்தகையப் பண்டிகையைக் கொண்டாடும் விருப்பத்தை ஏற்படுத்தியது. அதனைத்தொடர்ந்து மற்ற தலைமை சபைகளிலும் இந்தப் பண்டிகை மிகச் சிறப்பாக ஏற்படுத்தப்பட்டு இன்றுவரை கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (நல்லூர்- 1892), மெஞ்ஞானபுரம்- 1893) டோனாவூர், சுவிசேஷபுரம்- 1894) பாளையங்கோட்டை- 1895), சுரண்டை மற்றும் பண்ணைவிளையில் 1896லும் இப்பண்டிகைகள் தொடர்ச்சியாகத் தொடங்கப்பட்டன.)

இவ்வாறு கிறிஸ்து பிறப்பு, உயிர்ப்பின் பண்டிகை ஆகிய முதன்மையான பண்டிகைகளோடு ஸ்தோத்திர பண்டிகை, ஆலய பிரதிஷ்டை பண்ணிகை, பாலர் மனமகிழ்ச்சிப் பண்டிகை… போன்ற பல்வேறு பண்டிகைகளை ஏற்படுத்தி சிறப்பாக கொண்டாடி மகிழ்கின்றனர். பண்டிகை என்ற சொல்லானது, பண்டம் + ஈகை என்ற பொருளில் மக்கள் தங்கள் பண்டங்களை ஏழை எளியவர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் ஈகையாக அளித்து மகிழுதல் என்ற சிறந்த அர்த்தமுடையது. ஆனால் இன்றைய பண்டிகைகள் இந்தச் சிறந்த உட்பொருளை மறந்து ஆடம்பரங்களையும் கொண்டாட்டங்களையுமே கொண்டதாக மாறிவருவதும் வருத்தமான உண்மை.

"Lead Kindly Light; amid The encircling gloom
Lead Thou me on!
The night is dark, and I am far from home-
Lead Thou me on!
Keep Thou my feet; I do not ask to see
The distant scene one step enough for me."

# காரிருளில், என் நேச தீபமே



ஹென்ரி கார்டினல் நியூமேன் 1801 ம் ஆண்டில் லண்டன் நகரில் பிறந்தவர். கல்வி அறிவு மிக்க முதிர்ந்தவர். 1822 இல் ஓரியல் கல்லூரியில் பணி ஆற்றி வந்தார். 1845 இல் ஆங்கில திருச்சபையைவிட்டு ரோமன் மதிப்புரிமை பெற்றார். 1842 வரை ஆங்கில திருச்சபையில் மிகச்சிறந்த சபையைத் தழுவிக்கொண்டார். இது சரித்திரத்தில் ஓர் முக்கியமான சம்பவம். பிரபந்தங்கள் பல ஆக்கினார். ரோமச்சபையில் பல பதவிகள் தாங்கினர். 1879 இல் கார்டினல் டீக்கன் பட்டம் பெற்றார்.

துவேஷமின்றி கூறுமிடத்து இவர் ஓர் பக்தன். வாழ்க்கையில் பல வகை சரீர ஆன்ம இன்னல்களை அடைந்தவர். பல வகை அறிவும் ஒளியும் படைத்தவராயிருந்தபோதிலும், ஒளிக்காகக் கெஞ்சி மன்றாடிய ஓர் தேவ மனுஷன். 1833 ம் ஆண்டு ஜீன் மாதம் 16 நாள் கடலில் அலசடிப்பட்டுக்கொண்டிருக்கும் பொது 'காரிருளில் மாநேச தீபமே, நடத்துமேன்' என்று உள்ளம் பொங்கி இவ்வழகிய பாடலை இயற்றினார். அது ஆக்ஸ்போர்ட் இயக்க காலம் (Beginning of the Oxford Movement). மக்களுக்குள் புத்துணர்ச்சி ததும்பிக்கிடந்த ஓர் காலம், நிற்க...

1833 க்கும் 1845 க்கும் இடைப்பட்ட காலத்தில் நியூமேனின் வாழ்க்கை அகவிருளில் அகப்பட்டு அலம்பிக் கிடந்தகாலம், 1833, ஜீன் 16 நள்ளிரவில் ஆன்ம வாழ்க்கையின் இருளும் சரீர வாழ்க்கையின் இருளும் ஒன்றுபட்டது போலும். ஆன்ம வாழ்க்கையின் கஷ்டங்களும், கவலைகளும், சரீரக்கஷ்டங்களோடு ஒன்றுபட்டுக் காரிருளாயிற்று போலும்.

நியூமேன் என்ற பேரறிவு படைத்தோனே உள் அறிவு உனக்கு ஒளியைக் கொண்டு வரவில்லையோ! நீ வகுத்த உயரிய உத்தியோகங்கள் அக்கொடிய இரவில் விண்ணொளியைக் காட்டவில்லையோ! நீ ஆக்கிய நூல்கள், பிரபத்தங்கள், ஒரு வேளை உன் கீர்த்தி வாய்ந்த 90ம் பிரபந்தம் (Tract 90) உன் எதிர்வாதம் (Apologia pro Vita Sua) இவைகள் கூட நடுக்கடலில் ஆறுதலைக்கொணரவில்லையோ! ஐயோ, 'ஓர் அடி மட்டும்' கூட வழி காட்ட முடியாமற் போயிற்றோ!

வாழ்க்கையில் மனிதனுக்கு ஏற்படவேண்டிய திவ்விய திகில் நிலை (ஸீஷெஷ்விஷ்வி) உனக்கும் ஏற்பட்டாயிற்று. வானத்தையும் பூமியையும் அதிரச் செய்யும் ஆண்டவன் உன்னை அதிரப்பண்ணினார். உனக்குள் அதிர்ச்சி உண்டாயிற்று (Sense of despair). நீ உட்கார்ந்திருக்கும் கப்பல் ஆடுகிறது. அலை

மோதியடிக்கிறது. கீழ் திசையின் ஒளிக்காகக்காத்திருக்கிறாய். ஒளியைக் காணோம். கீழே ஆழம். ஆழத்தில் இருள். மேலே இருள். சுற்றிலும் காரிருள். சந்திரனே நீ மறைந்து போனாய்! நட்சதிரக்கூட்டங்களே நீங்கள் ஒளித்துக்கொண்டீர்கள்! மின்னல்களே காரிருள் உங்களையும் மூடிப்போட்டதே! சூரியனே உன்னை எப்போ காண்பேன்!

இத்திகில் நிலையில் நான் என்ன செய்வேன் (Either Or) என்னில் ஒன்றுமில்லை. வேறொளியில்லை. என் வீடோ தூரம், 'நேச தீபமே" நீர் என்னை நடத்தும். நீர் என் பாதம் இடறாதபடித் தாங்குமேன். தூரக்காட்சியையும் பெருங்காரியங்களையும் நான் ஆசிக்கவில்லை. நேசதீபமே 'ஓர் அடி மட்டும் என் முன் காட்டுமே'. ஓர் வார்த்தை சொல்லும் அப்பொழு ஜீவன் உண்டாகும். இஸ்ரவேலின் அக்கினி ஸ்தம்பமே வழி காட்டும்.

வாழ்க்கையின் காரிருளில் வதங்கிக்கிடக்கும் தேவனுடைய பிள்ளையே, இவ்வினிய கீதத்தில் உனக்கு அனுபவ ஆனந்தம் உண்டு. அகமும் இருள், புறமும் இருள். எங்கள் தேவன் எங்களை மறந்தாரோ என்று திகைத்த காரிருள் உண்டு. தகப்பனின் வீட்டை விட்டு அலைந்து பன்றிகளின் தவிட்டைத்தின்று திரிந்த காரிருள் உண்டு. 'என் கால் சறுக்குதலுக்கு சற்றே தப்பிற்று' என்ற காரிருள் உண்டு. ஓர் அடி எடுத்துவைக்க வழி இல்லாமல் திகைத்த இராக்காலங்கள் உண்டு. எகிப்தின் காரிருள் பல வகையில் சூழ்ந்த நிலையுண்டு. வெளிச்சம் காணாமல் அலைந்து திரிந்து அழுத காலமுண்டு.

'காரிருளின் நேசதீபமே' நம்மை காரிருளின் மத்தியில் நடத்துவார். அவரை நோக்கி மாத்திரம் கெஞ்சுவோம். "ஓர் அடி தூரம் மட்டும்" நடத்தக்கெஞ்சுவோம். ஆத்துமாவே, வீசுவாச கீதமாகவும், ஆறுதல் கீதமாகவும், நன் நம்பிக்கையின் கீதமாகவும் இதை நீ பாடுவாய்.

**"காரிருளில், என் நேச தீபமே**
**நடத்துமேன்;**
**வேறொளியில்லை, வீடும் தூரமே,**
**நடத்துமேன்;**
**நீர் தாங்கின் தூரக்காட்சி ஆசியேன்,**
**ஓர் அடிமட்டும் என் முன் காட்டுமேன்".**


## Membership

HTTPS://CHRISTIANHISTORICALSOCIETY.IN/MEMBERSHIP/

| Member [Basic] | Member [Silver] | Member [Gold] | Member [Platinum] |
|---|---|---|---|
| Name Listed on Members | Basic Plan Features applicable | Basic Plan Features applicable | Basic Plan Features applicable |
| Email Newsletter | Membership T-Shirt | Membership T-Shirt | Membership T-Shirt |
| Frequent Updates | Membership Card | Membership Card | Membership Card |
| Access Our Rare Collection Books | Membership gifts | Membership gifts | Membership gifts |
| One Time Fee | One Time Fee | One Time Fee | One Time Fee |
| | | Varalatru Suvadugal Magazine (1 Year Subscription) | Varalatru Suvadugal Magazine (5 Year Subscription) |
| Contribute ₹ 1000 | Contribute ₹ 2000 | Contribute ₹ 2500 | Contribute ₹ 5000 |

CHRISTIAN HISTORICAL SOCIETY

ENGAGE, ENRICH, EMPOWER CHRISTIAN KNOWLEDGE



# மேய்ப்பனின் கதை

அமெரிக்கா தேசத்தில் வசதிபடைத்தவரடங்கிய ஓர் சபை உண்டு. அதின் அங்கங்கள் யாவரும் பெருத்த சமுசாரிகள். செழிப்பான நிலங்கரை உள்ளவர்கள். ஒவ்வொருவர் வீட்டிலும் பால், தயிர் தாராளமாயுண்டு. முதற்தரமான பசுக்கள் நேரத்துக்கு ஆறு, ஏழுபடி பால் ஈறக்கும்.

சபையில் வெகுகாலம் வேலை பார்த்த குருவானவர் மரித்துப்போகவே, புது ஐயர் ஒருவர் ஏற்படுத்தப்பட்டார். சபையின் மூப்பர் கூடி ஐயரை நல்வரவேற்கும் வழிவகைகளை ஆலோசித்தனர். ஐயர் வீட்டை வெள்ளையடித்துக் சுத்தம் செய்து அலங்கரிக்க ஒருவர் ஒப்புக்கொண்டார். வேறொருவர், முதல்நாள் போஜனம் தயார் செய்து அனுப்புவேன் என்றார். இன்னொருவர், ஐயருக்குப் பசுமாடு இருக்கமாட்டாதல்லவா? என் மந்தையில் நேரத்துக்கு ஆறு படி கறக்கிற பசு ஒன்றிருக்கிறது. அதை ஐயர் வீட்டில் கட்டி விடுகிறேன். நமக்கு சம்பிரமமாய் பால் இருப்பது போல, ஐயர் வீட்டிலும் இருக்கட்டும் என்றார். நல்லகாரியமென்று அனைவரும் ஆனந்தங்கொண்டார்கள்.

ஐயரும் அம்மாளும் வந்திறங்கி சபை மூப்பரின் அன்பை நன்குணர்ந்து அகமகிழ்ந்தார்கள் - பசுவைக்கண்டு, அவர்களுக்கிருந்த சந்தோஷம் கொஞ்சநஞ்சமல்ல. **'அம்மணி, பசுவில் பால் கறக்க உனக்குத் தெரியுமா?'** என்று ஐயர் அம்மாளைக் கேட்டார். **'ஐயோ, தெரியாதே, உங்களுக்கு தெரியுமே"** என்று அம்மாள் கேட்டார்கள். **'தெரியாது. பரவாயில்லை. நமது சபையாரில் ஒருவரைக் கூப்பிட்டுக் கறந்து கொள்ளளலாம்."** என்று ஐயர் சொல்லிவிட்டார்.

அவ்வாறே சிநேகிதர் ஒருவர் வந்து கறக்கவே, ஆறு படி பால் கறந்து கொடுத்தார். அம்மாள் ஆச்சரியப்பட்டு, **'ஐயா, நம்மிருவருக்கும் இவ்வளவு பால் அவசியமில்லை. அரைப்படி பால் உண்டானால் போதும். மீதியை நாம் என்ன செய்ய? இனி இப்படிக்கறக்க விடப்படாது. பசு கெட்டுப்போகும். அரைப்படி கறந்தபின், கன்று கொஞ்சம் குடிக்கட்டும் மீதிமாட்டிலேயே இருக்கட்டும், நமக்கு வேண்டியது கிடைத்தால் அதுவே போதும்'** என்று ஐயரிடம் சொன்னார்கள். ஐயரும் பசுவின் மீது அம்மாளுக்கிருந்த அனுதாபத்தைக் கண்டு, களித்து, மறுநாள் முதல் அவ்வாறே செய்யத்தீர்மானித்தார்.

. மூன்று மாதம் சென்றது. ஊரில் விஷஜூரம் வந்தது. பலர் கஷ்டப்பாடுபட்டார்கள். ஜூரம் கண்டு மறு பிழைப்பு பிழைத்தவர்களில் ஐயர் வீட்டுக்கருகாமையிலுள்ள ஓர் வீட்டிலுள்ள மூன்று இளைஞர் தவிர இதரபோஜனம் இவர்களுக்கு ஆகாது. இந்தப்பால் யார் கொடுத்தனுப்புக்கூடுமென்று மூப்பர் ஆலோசிக்கவே பெரியவர் ஒருவர் ஐயரைப் பார்த்து, ஐயா, உங்கள் மாடு நல்லா பால் கொடுக்குமே. உங்கள் வீடு இவ் வீட்டுக்கு மகாசமீபம். தயவுசெய்து இப்பிள்ளைகளுக்கு ஒருபடி பால் கொடுத்தனுப்புவீர்களா? என்று கேட்டார், ஐயர் மெதுவாய்க் காதுக்குள் **"அப்பசுவிலிருந்து இப்பொழுது கறக்கும் பால் எங்களுக்கு பற்றாதிருக்கிறது. இருந்தால், சந்தோஷமாய்க் கொடுப்போம். இல்லையே"** என்றார். பெரியவர் ஆச்சரியப்பட்டு, **"நான் அம்மாட்டைக் கொடுத்தபோது, அது ஆறு படி பால் கறந்ததே. நீங்கள் என்ன செய்தீர்கள்?"** என்றார்.

நடந்த சங்கதியை ஐயர் விவரித்தார். பால் ஒட்டக்கறந்தால்தான் பால் ஊறும், மற்றப்படி வற்றிப்போகும் என்ற சங்கதியை ஐயர் அறியாமல் பசுவைக் கெடுத்துவிட்டாரென்று பெரியவர் அறிந்து கொண்டார்.

சபையின் தன்மையை அறியாது. சபையைக்கெடுக்கிற ஐயர்மாரும் இல்லையா? சுய ஆதரவுக்கும், சுயபோஜனைக்கும் மாத்திரம் சபையார் கொடுத்தால் போதும், வெளிவேலைகளுக்கும், சுவிசேஷ வேலைகளுக்கும் வடதேச மிஷனுக்கும் கொடுத்தால், சபையாருக்கும் கஷ்டமென்றும், சங்கப்பணத்துக்கு நஷ்டமென்றும் பயப்படும் போதகன்மார் கவனித்துக் கொள்ளட்டும். ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன்பிள்ளை தானே வளரும் வாரியிறைத்து, விருத்தியடைவார் உளர். கையை இறுகப்பிடித்து வறுமையடைவோரும் உளர்.

**கறக்கக்கறக்கப் பால் ஊறும்.**
**கொடுக்கக்கொடுக்க கை விரியும்.**

# "ஊற்றுமலை வடிவேலு"

இன்றிலிருந்து நூறாண்டுகளுக்கு முன் மேல் திருநெல்வேலிப் பகுதியில் கொள்ளைக்காரனொருவன் மக்களைக் கலக்கி வந்தான். "ஊற்றுமலை வடிவேலு" என்னுமவன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அழுத பிள்ளையும் வாயை மூடிக்கொள்ளும். பற்பல சமயங்களில் பற்பல வேடங்களிலலைந்து பல துணிகரக்கொள்ளைகளையும் திருட்டுக்களையும் நடத்திவந்தான். யாரும் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியாது. அவனைப் பிடிப்பதும் கூடாததாயிருந்தது.

ஒரு நாள் அவன் ஏதோவொரு காரியமாகக் கட்டை வண்டியொன்றை ஓட்டிக்கொண்டு பாளையங்கோட்டை-திருநெல்வேலிப் பெரும்பாதையில் வந்து கொண்டிருக்கையில், பாளையங்கோட்டைப் பெண்கள் பாடசாலைக்கருகில் திடீரென்று மாடுகளிரண்டும் மிரண்டு, வண்டியை இழுத்துக் கொண்டு வயல்களுக்குள் விழுந்தன. மாடுகளொன்றின் ஒரு கால் ஒடிந்து போயிற்று. அவனுக்கும் முதுகிலும் விலாவிலும் சரியான அடி. அவனை இன்னானென்றறியாத வழிப்போக்கர் சிலர் அவனுக்குதவி செய்ய, அவன் எழுந்து, அம்மக்களின் ஒத்தாசையால், பாளையங்கோட்டை மிஷன் சத்திரம் வந்து சேர்ந்தான். நேரமோ இருட்டிவிட்டது. அது அவனுக்கு நல்லதாய்ப் போயிற்று! அன்று சத்திரம் நிறைந்திருந்ததால் அவன் ஒரு மூலையில் ஒதுங்கிப் படுத்து, வலியினால் முனகிக்கொண்டிருந்தான். சிலர் அவனுக்கு அனுதாபம் காட்டினர்.

அவர்களுள் வயோதிபப் பெண்ணொருத்தி. ஏழையான அம்மூதாட்டி ஒரு கிறிஸ்தவள். நல்லூருக்கருகிலுள்ள ஒரு கிராமத்தினள். பெரும்பாதைகளில் வண்டிமாடுகள் போடும் சாணத்தைச் சேர்த்து, எருதட்டி விற்றுப் பிழைப்பவள். அந்தப் பாட்டி எவ்வாறோ வடிவேலுவை அடையாளம் கண்டுகொண்டாள். உடனே அவள் எங்கிருந்தோ தைரியம் வரப்பெற்றவளாகி, அவனுடைய அக்கிரம வாழ்க்கையைக் குறித்து இரக்கமின்றிக் கண்டித்து, அவனுக்கு வரப்போகும் தேவ தண்டனையை எடுத்துக் கூறினாள். எவரையும் சட்டை செய்யாத வடிவேலு, அவள் கூறியவை யனைத்தையும் எதிர்பேசாது கேட்டுக்கொண்டிருந்து, தன் நெஞ்சில் கலக்கம் கொண்டான். அம்முதியவள் பின்னும் பேசுவாளாகி இயேசுரட்சகரின் அன்பையும், அவரது பாடுமரணம் உயிர்த்தெழுதலையும், அவரருளும் மீட்பையும் விளக்கிக் கூறவே, எதற்குமிளகாநெஞ்சினனான வடிவேலு உள்ளமுடைந்து, மெய்யுணர்வு பெற்றுக் கண்ணீர் சிந்தினான்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அன்று அவன் பரி. திரித்துவ ஆலயத்துக்குச் சென்று ஆராதனையில் பங்குபெற்றான். மாலையில் அவன் ஊர் திரும்பிக், கிறிஸ்துவினடியானாகி, அவ்வாண்டினிறுதிக்குள் (1868) சுரண்டை மிஷனெரி ஹானீஸ் ஐயரிடம் ஞானஸ்நானம் பெற்று, ஊற்றுமலைச் சபையில் ஒரு தூணாக விளங்கினான்.

# நன்றியுள்ள உள்ளத்துடன்

பண்ணைவிளைக் கிராமம் திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. ஏனெனில் அவ்வூர் வாழ்விலேயே அந்நாள் வரை அது அறிந்திராத ஒரு மகத்துவமான ஆராதனை அவ்வூர் பங்களாத் தேவாலயத்தில் மறுநாள் (டிச. 18, 1859) நடக்கவிருந்தது. சென்னை அத்தியட்சர் தாமஸ் டேயல்ட்ரி (Rt. Rev. Thomas Dealtry) வந்து மிஷனெரி J. T. டக்கர் ஐயருடன் தங்கியிருந்தார். குருப்பட்டம் பெற வந்திருந்த நான்கைந்து மிஷனெரிமாரும், மற்ற சில மிஷனெரிகளும் வந்திருந்தனர். மறுநாள் அந்நான்கைந்து மிஷனெரிகளுக்கும் சுமார் பன்னிரண்டு நெல்லை மக்களுக்கும் உதவிகுரு, குருவபிஷேகங்கள் கொடுக்கப்படவிருந்தன. அவ்வூரில் முதல் முதல் நடத்தப்படவிருந்த குருவபிஷேக ஆராதனையாதலால், அதைக் காணவும் ஆராதனையில் பங்குபெறவும் கூடிய கிறிஸ்தவ மக்கள் ஏராளம்.

காலை ஏழு மணிக்குத்தான் ஆராதனையெனினும், விடியுமுன் மக்கள் ஆராதனைக்கு வரத்தொடங்கிவிட்டார்கள். அவர்களனைவர்க்கும் குருப்பட்டம் கொடுப்பதைக் கண்குளிரக்காண வேண்டுமென்னும் ஆசை அதிகம். எனவே முதலில் வந்தவர்களெல்லாரும் காலரியில் ஏறி இடம்பிடித்துக்கொண்டார்கள். காலரி நிரம்பிவிட்டது. மேலும் மேலும், இனி நிற்கவும் இடமில்லை யென்றாகுமட்டும் ஏறினார்கள். (அது போன்ற காலரி பாளையங்கோட்டை அத்தியட்சாலயத்திலும் உண்டு).

ஆராதனை தொடங்குவதற்கு முன் ஆலயமும் நிரம்பி வழிந்தது.

இன்னும் சில நிமிஷங்களேயிருந்தன ஆராதனை ஆரம்ப மாவதற்கு. குருமாரும், மிஷனெரிமார், அத்தியட்சரின் சேப்ளன், அத்தியட்சர் எல்லாரும் மணியடித்தோய்ந்ததும் பவனிவர ஆயத்தமாய் நிற்கின்றனர். மணிச்சத்தமும் ஓய்கிறது. உள்ளூர் மிஷனெரி டக்கர் ஐயர் முதல் பாட்டின் எண்ணைச் சொல்ல வாய்திறக்கிறார். திடீரென்று ஆலயத்திற்குள் மடமடவென்ற பெருஞ்சத்தம்!. தொடர்ந்து கூக்குரல்! ஓலம் அலறல்! மக்கள் ஒருவரையொருவர் இடித்துக் கொண்டு வெளியேறத்துடிக்கும் துடிப்பு!

நடந்ததென்ன? காலரியைத் தாங்கிக் கொண்டிருந்த பெரிய உத்திரம் மடமடவென்று உடைந்து கீழே இறங்கிற்று பாரம் தாங்காமல். இறங்கிய உத்திரத்தை அதை இணைத்திருந்த நீண்ட கனத்த ஆணி வளைந்துகொடுத்து, ஒடிந்து விழுந்துவிடாமல் பிடித்துக்கொண்டது. அந்த ஆணி மட்டும் அப்படிப் பிடித்திராவிட்டால், காலரிக்குக் கீழ் உட்கார்ந்திருந்த அனைவரும் நசுங்கிச் செத்திருப்பர். காலரியிலிருந்தவர்களுக்கும் உறுப்பு நாசமும், ஒருவேளை உயிர்சேதமு மேற்பட்டிருக்கும். கர்த்தர் எவ்வளவு ஆச்சரியமாகத் தம் ஜனங்களை அன்று காத்தருளினார்!.

காலரியிலிருந்தவர்கள் பத்திரமாய் இறக்கப்பட்டு, அமைதியேற்பட்டபின், சுமார் அரைமணி தாமதத்துடன் ஆரம்பித்த அவ்வாராதனையில் அனைவரும் நன்றியுள்ள உள்ளத்துடன் பங்குகொண்டு கர்த்தரைத் துதித்து மகிழ்ந்தனர்.

## திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகிவந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த மூன்று ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலகப் கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனிநபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜீன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1600 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடியிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு ஒரு மிஷனெரியின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனிரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் சார்பாக வரலாற்று **ஆய்வுக் கருத்தரங்கம்** நடத்துவது வரலாற்று கள ஆய்வு பயிற்சிக்கான Workshop நடத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அதற்கான ஆயத்தப்பணிகள் நடந்துகொண்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in




**செல்: 94433 63760, 99946 32523, 99942 25836**

**வாடியூர் ரோடு சுரண்டை-627859**

Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401